**தலைப்பு 111 - சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக்கூற்று என்பன சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணைக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 111 – சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 27 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்,

ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.22 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் ஏற்பாடுகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிராமையால் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற்பட்டிருந்ததாக இனங்காணப்பட்டிராமை. | 2.2(அ) |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.13(அ) |
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.18 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாபிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.7 |
| | | 2. | தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | முகாமைத்துவ நலிவுகள் | 2.11 |
| | | 4. | இணங்காமைகள் | 2.19 |
| | | 5. | மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.22 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. | பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.2(ஆ) |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் அடையப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தமை | 2.2(இ) |
| | | 3. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.2(ஈ) |
| | | 4. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதிலான குறைபாடுகள் | 2.2(உ) |
| | | 5. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.2(ஊ) |
| | | 6. | காலதாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | 2.2(எ) |
| | | 7. | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை | 2.3.1 |
| | | 8. | பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.4.1 |
| | | 9. | சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம் குறைவடைதல் | 2.5(ஊ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.5(ஆ) |
| | | 2. | சொத்துக்கள் விளைவற்று காணப்படுகின்றமை மற்றும் குறைப்பயன்பாடு | 2.5(எ) |
| | | 3. | நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை முறைமையின் அடிப்படையில் வாகனங்களை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.5(இ) |
| | | 4. | அலுவலகங்களை நடாத்துவதிலான குறைபாடுகள் | 2.5(ஈ) |
| | | 5. | மக்களுக்கான சேவையை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.12 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை. | 2.6(ஆ) |
| | | 2. | தீர்க்கப்படாத பொறுப்புகள் | 2.6(அ) |
| | | 3. | கட்டுநிதிக் கணக்கிலான குறைபாடுகள் | 2.15 |
| | | 4. | பொது வைப்புக் கணக்கிலான குறைபாடுகள் | 2.16 |
| | | 5. | வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.17 |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.13(ஆ)(i) |
| | | 2. மிகை நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிராமை | 2.13(ஆ)(ii) |
| | | 3. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.13(ஆ)(iii) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.14 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் | 1. சொத்துக்களிலிருந்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை | 2.5(உ) |
| | | 2. நிதி மோசடி தன்மையிலான குறைபாடுகள் | 2.8 |
| | | 3. நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.9 |

தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 973 பிரதம பணிகள் காணப்பட்டதுடன், அமைச்சு மற்றும் அதன் கீழ் நிறுவப்பட்டுள்ள 23 நிறுவனங்கள் மற்றும் 01 நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னரே தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சுமார் 06 மாத காலங்கடந்த பின்னர் அதாவது 2017 யூன் 22 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 973 செயற்பாடுகள் மேற்படி 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள 20 பிரதான பணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்காமையால் அந்த பிரதான செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கான திட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் (Impress Requirement Plan) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பணிகள்

(i) வருடாந்த செயல்நடவக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 973 செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராமையால், அந்த 973 செயற்பாடுகளில் நிறைவேற்றப்பட்ட மற்றும் நிறைவேற்றப்படாத செயற்பாடுகளின் எண்ணிக்கை இனங்காண முடியாதிருந்தது.

(ii) வருடாந்த செயல்நடவக்கைத் திட்டத்தின் பிரகாரம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கட்டுநிதி கிடைக்காமை மற்றும் பெறுகைகள் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்படாமை போன்ற காரணங்களால் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூப 18,094 தொகையான மூலதன நிதியேற்பாடுகள் விளைவற்றுப் போயிருந்தன.

**(ஆ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

அமைச்சின் கீழல்லாத மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத கலஹா பத்திராவதி பிக்கு சிகிச்சை நிலையங்களின் அனைத்து மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காகவும் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான நான்கு வருடங்களினுள் ரூபா 48.7 மில்லியன் கூட்டுத்தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. 2014 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இந்த நிலையத்தின் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டரீதியான நிறுவனமொன்றாக பாராளுமன்ற அதிகாரச் சட்டமொன்றின் மூலம் நிறுவுவதற்கு அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் மீள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) உத்தேச அடைவு மட்டம் அடையப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த முடியாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 197 பல்வேறு மூலதன செயற்பாடுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 45,594 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 27,500 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராமையால் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டதாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஈ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 199 மில்லியன் தொகையான வழங்கல் பிரிவிற்காக வெலிசர பிரதேசத்தில் பெரசவி களஞ்சியமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது 2017 மார்ச் 22 ஆந் திகதி ரூபா 241 மில்லியனான ஒப்பந்த பெறுமதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாது நிலம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், கட்டிடமொன்றினை அமைப்பதற்கு பொருத்தமான நிலமாக மாற்றுவதற்காக ரூபா 390 மில்லியன் மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேரிடுமென பின்னர் இனங்காணப்பட்டமையின் காரணத்தால் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன், அது வரையிலும் காணியை சுற்றிலும் மதிலொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(உ) செயற்திட்டங்களை ஆரம்பிப்பதிலான தாமதங்கள்**

அமைச்சினால் 5 மருத்துவமனைகளின் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை அலகுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், செயற்திட்டத்தின் திட்டத்தை அவ்வவ்போது மாற்றுதல், பெறுகை நடவடிக்கைகளுக்கு நீண்டகாலம் எடுக்கின்றமை மற்றும் உத்தேச நிர்மாண பூமியை மாற்றுதல் போன்ற காரணங்கள் அது தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

**(ஊ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள்**

அமைச்சினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதும் உடனடியாக ஒப்பந்ததாரருக்கு வேலைத் தளத்தினை ஒப்படைக்காமை, நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் திட்டத்தினை மாற்றியமைத்தல், ஒப்பந்ததாரரின் பட்டியல்களுக்கு 28 நாட்களுக்குள் கொடுப்பனவு மேற்கொள்ளமை, நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சாக்கடை கட்டமைப்பு, நீர் விநியோகக் கட்டமைப்பு, மின்சார விநியோகக் கட்டமைப்பு, உள்ளக வீதிகள், மருத்துவ வாயுக்கட்டமைப்பு மற்றும் மருத்துவக் கழிவுகளை எரிக்கும் நிலையம் போன்ற கழிவகற்றும் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் செயற்திட்ட சாத்தியவள மதிப்பீடுகளின் நலிவுகள் போன்ற காரணங்களின் அடிப்படையில் 14 நிர்மாணச் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது.

**(எ) காலதாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட தாமதித்து ஆரம்பிக்கப்பட்ட சில செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| செயற்திட்டம் | ஒப்பந்த பெறுமதி | உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | தாமதக் காலம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர விபத்துக்கள் மற்றும் சிகிச்சை பிரிவு, கட்டம் I | 586,280,164.73 | 2015/12/16 | 2016/03/23 | 96 நாட்கள் |
| த சொய்சா பெண்கள் மருத்துவமனையின் முன் பிரவச குழந்தைகள் பிரிவினை நிர்மாணித்தல் | 325,406,764.69 | 2015/08/25 | 2016/01/19 | 146 நாட்கள் |
| யாழ்ப்பாண தாதியர் விடுதிகளின் முதலாம் மற்றும் இரண்டாம் மாடிகளினை நிர்மாணித்தல் | 111,216,333.27 | 2016/07/19 | 2016/09/05 | 47 நாட்கள் |

**2.3 அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதிகளை ஈடுபடுத்தி நடைமுறைப்படுத்தப்படும் 58 செயற்திட்டங்களுக்காக ரூபா 18,216 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மற்றும் 22 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களுக்காக ரூபா 14,746 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் முறையே ரூபா 12,202 மில்லியன் மற்றும் ரூபா மற்றும் 7,005 மில்லியன் எனுமாறு ரூபா 19,207 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 13,705 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் 42 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

**2.3.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒத்துழைப்பினை நல்குதல் உலக வங்கிக் கடன் உதவியின் கீழான இரண்டாம் சுகாதார பிரிவின் அபிவிருத்தி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிதி உடன்டிபடிக்கையின் பிரகாரம், தேசிய ரீதியில் மற்றும் மாகாண மட்டத்தில் செயற்திட்டத்தின் பணிகளை நடைமுறைப்படுத்தல் முறையே அமைச்சிடமும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. மந்த போசனை மற்றும் தொற்றாத நோய்கள் தொடர்பான சவால்களுக்காக மிகவும் சிறப்பான பிரதிபலனை உருவாக்குவதற்கு இயலக்கூடிய வகையில் மக்களின் சுகாதார செயலாற்றல் தொடர்பான நியமங்களை அதிகரிக்கச் செய்தல் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக இருந்தது. செயற்திட்டப்பணிகள் இரு கூறுகளை கொண்டிருந்ததுடன், செயற்திட்டமானது 2013 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி முடிவுறுத்த திட்டமிடப்பட்டிருந்தது. நிதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமானது ரூபா 25,270 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 4,436.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கையின் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக 14 மருத்துவ மனைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளை புதிதாக நிர்மாணிப்பதற்கும், மேலும் 14 மருத்துவமனைகளில் தற்போது காணப்படும் அவசர சிகிச்சை பிரிவினை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களுத்துறை, பொலன்னறுவை, யாழ்ப்பாணம், மற்றும் கல்முனை மருத்துவமனைகளின் அவசர சிகிச்சை பிரிவு புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,900.07 மில்லியனான அந்த நிர்மாணங்கள் எதுவும் உரிய திகதிகளில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சின் கீழான வாகன அணியை முகாமை செய்வதற்காக ரூபா 4.7 மில்லியன் கிரயத்துடனான மென்பொருள் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 2014 திசெம்பர் 18 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களை மிகைத்து செயற்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை பணிப்பாளர் (போக்குவரத்து) பதவி வகிக்கும் உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டிருந்தது. 2016 யூன் 30 ஆந் திகதியளவில் மென்பொருள் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தும் அனைத்து பணிகளை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் ஒப்பந்தக் காலமும் நீடிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 வழிகாட்டிக்கமைய செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ளாது, 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1.88 மில்லியன் குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்ட நிதியேற்பாட்டின் கீழ் 02 Linear Accelerators இயந்திரங்கள் 2015 திசெம்பர் 02 ஆந் திகதி ரூபா 476 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த இயந்திரம் பொருத்தப்பட வேண்டிய கொங்கிறீட் பங்கர்களை நிர்மாணிப்பதிலான தாமதத்தின் காரணமாக பொருத்தப்படாது யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மருத்துமனைகளில் 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் 2 வருடங்களும் 6 மாதங்களுக்குமான காலமாக அந்த இயந்திரம் செயலற்றுக் காணப்பட்டன.

(iv) செயற்திட்டத்தின் கூட்டிணைந்த திட்டம் (Project Corporate Plan) இன் பிரகாரம் 05 வருடங்களான செயற்திட்டக் காலப்பகுதியினுள் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டுமொத்த நிதியேற்பாடு ரூபா 346 மில்லியனான போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 34 புதிய கண்டுபிடிப்பு ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்காக ரூபா 399 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. புதிய கண்டுபிடிப்புக்கள் ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும், 34 ஆராய்ச்சி முன்மொழிவுகளில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. புதிய கண்டுபிடிப்பு செயற்திட்டங்கள் சில ஒரே நபரினால் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்பு மீளாய்வுக் குழு (Review Committee) அங்கத்தவர்களால் ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை போன்ற காரணங்கள் ஆராய்ச்சி செயற்திட்டங்களை வினைத்திறனுடன் மேற்கொள்ளாமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(v) செயற்திட்டத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயலளவினை கட்டியெழுப்புவதற்காக ரூபா 672.74 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் உள்நாட்டு இயலளவினை கட்டியெழுப்புவதற்காக ரூபா 48 மில்லியன் மற்றும் வெளிநாட்டு இயலளவினை கட்டியெழுப்புவதற்காக ரூபா 371 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான செயன்முன்னேற்றம் 62 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(vi) இயலளவினை கட்டியெழுப்புவதற்கான விடயத்திற்குரிய வரையரைகள் (Terms of Reference) பிரகாரம், உள்நாட்டு இயலளவினால் கட்டியெழுப்புதலின் கீழ் செயற்திட்டக் காலப்பகுதியினுள் பெறுகை விலைக்கேள்வி ஆவணங்களை தயாரித்தல் மற்றம் விலைக்கேள்வி மதிப்பாய்வு (Preparation of building documents and bid evaluation) ஆகியவற்றுக்காக 1,080 உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், பயிற்சிநடவடிக்கைகளை திட்டமிடலிலான தாமதத்தின் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 86 உத்தியோகத்தர்கள் மாத்திரம் குறித்த பயிற்சியை நிறைவு செய்திருந்தனர்.

(vii) செயற்திட்டக் காலத்தினுள் கணனி குறுங்கால பாடநெறிகளின் (Online Short Courses) கீழ் 2,100 உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பாடநெறிகளை திட்டமிடல் தாமதமடைந்தமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பாடநெறிகளை ஆரம்பிக்க முடியாது போயிருந்தன.

(viii) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தரொருவரால் பெற்றுக்கொள்ளப்படும் முற்பணம் 10 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் அந்த பணி நிறைவடையுமாயின், அந்த பணி நிறைவடைந்ததுடன் தீர்க்கப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. எனினும், செயற்திட்டத்தினால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 6 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்தக் கட்டுநிதிகள் 16 நாட்கள் முதல் 348 நாட்கள் வரையான வீச்சிலான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ix) தேசிய பெறுகைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் திட்டத்திற்கமைய, 2017 ஆம் நிதியாண்டிற்கான முதலாவது மற்றும் இரண்டாவது கூறுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 3,636 மில்லியனாக இருந்ததுடன், அதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த ஒட்டுமொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,100 மில்லியன் ஆகும். எனினும், 2017 ஆம் ஆண்டின் போது 02 கூறுகளுக்காக செலவிடப்பட்ட பணம் ரூபா 1,621 மில்லியன் அல்லது தேறிய நிதியேற்பாட்டில் 52 சதவீதம் மாத்திரமாகும். உரிய திட்டமொன்றிற்கு மற்றும் காலச்சட்டத்திற்கமைய செயற்படாமையால் அமைச்சின் 05 பிரிவுகளால் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 32 மில்லியனான செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது.

**(ஆ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பணிகள் கைவிடப்படுதல்**

---

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வலிப்பு மருத்துவமனையொன்றையும் நாட்டின் 09 மாகாணங்களினதும் வலிப்பு சுகாதார நிலையங்களையும் நிர்மாணிப்பதற்காக சவூதி ரியால் 75 மில்லியன் அல்லது சுமார் ரூபா 3,000 மில்லியன் கடன் 2008 ஆம் ஆண்டின் போது சவூதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 09 வலிப்பு சுகாதார நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த அனைத்து பணமும் எவ்வித அங்கீகாரமுமின்றி வலிப்பு மருத்துமனையை நிர்மாணித்தல் மற்றும் அதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. 09 வலிப்பு சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மீண்டும் சவூதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து சவூதி ரியால் 45 மில்லியனுக்கு அண்மிய சுமார் ரூபா 1,690.65 மில்லியனான கடன் தொகை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அந்த முழுக் கடன் தொகையும் மீண்டும் மருத்துவமனைக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், 09 வலிப்பு சுகாதார நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகளேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.2 உள்நாட்டு நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் பிணியாய்வு கட்டிடத்தினை நிர்மாணித்தல்

கட்டிடத்தினை அபிவிருத்தி செய்தலில் முதலாம் கட்டம் ரூபா 120.6 மில்லியனான வரியற்ற ஒப்பந்தப் பெறுமதியுடன் தனியார் கம்பனியொன்றுக்கு 2013 பெப்ரவரி 11 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் பணிகள் ஒரு வருடமும் இரண்டு மாதங்களுமான தாமதத்தின் பின்னர் அதாவது 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன் இரண்டாம் கட்டம் ரூபா 144.2 மில்லியனான வரி நீங்கலான ஒப்பந்தப் பெறுமதியுடன் மற்றுமொரு தனியார் கம்பனிக்கு 2014 செப்தெம்பர் 04 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களுக்காக போதியளவான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய மற்றும் உரிய கண்காணிப்புடனும் செயற்பட்டிராமை மற்றும் கட்டிடத்தின் திட்டம் கொழும்பு மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்டிராமையும் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை போன்ற காரணங்களின் காரணமாக இரண்டாவது கட்டத்தில் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் 05 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் காலமானது 399 நாட்களால் நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் 10 ஆந் திகதி ஒப்பந்தக் காலமானது நிறைவடைந்திருந்த போதிலும், செயற்திட்டமானது கணக்காய்வு திகதியான 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், தாமதக் காலமானது 09 மாதங்களும் 21 நாட்களுமாகும்

(iii) 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதியின் பிரகாரம் ஒப்பந்தக் காலமானது நீடிப்பு செய்யப்பட்டமையால் விலை அதிகரித்தமையினால் ரூபா 2,905,550 தொகை மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்த நேர்ந்திருந்தது.

(iv) செயற்திட்டத்தின் மதியுரை நிறுவனமாக செயற்பட்டதென கருதப்பட்ட பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மதியுரைக் கட்டணங்களாக ரூபா 2,551,811 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பணியகத்தினை மதியுரை நிறுவனமாக தெரிவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிராததுடன், மதியுரை நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக பெறுகை நடைமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடத்தின் மின்சார இணைப்பினை பெற்றிராத காரணத்தால் மின் விநியோகக் கட்டமைப்பு, மின்சார உபகரணங்கள், வளிச் சீராக்கல் கட்டமைப்பு மற்றும் மின்தூக்கி ஆகியன உரிய முறையில் இயங்குகின்றனவா என்பதை பரீட்சிக்க முடியாது என்பது 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(vi) 2017 யூன் 14 ஆந் திகதியளவில் ரூபா 7,214,151 ஆன செயலாற்றல் காப்பீடு காலாவதியாகியிருந்த போதிலும், அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) களுபோவில தெற்கு கொழும்பு போதனா மருத்துவமனையின் 07 மாடிகளை கொண்ட மில்லேனியம் நோயாளர் விடுதிக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்**

---

கழுபோவில தெற்கு கொழும்பு போதனா மருத்துவமனையின் 07 மாடிகளினைக் கொண்ட மில்லேனியம் நோயாளர் விடுதிக் கட்டிடத் தொகுதியின் நிர்மாண ஒக்கந்தமானது ரூபா 398 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடன் 2006 ஆகஸ்ட் 14 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2008 மார்ச் 19 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதியுரை நிறுவனமாக பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகம் செயற்பட்டிருந்ததுடன், திட்டமிடப்பட்ட 07 மாடிகள் நிர்மாணிக்கப்பட்டவாறு காணப்படுவதுடன், மேலுமொரு மாடியினை நிர்மாணிப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கு அல்லது உரிய பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் உள்நாட்டு நிதியத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 854.04 மில்லியனாக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராமையால் தாமதக் காலமானது 09 வருடங்களாகும். அறிக்கையிடப்பட்டிருந்தவாறு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலானது முறையே ரூபா 565.28 மில்லியன் மற்றும் 66 சதவீதம் மாத்திரமாகும்.

(iii) உரிய முறையில் ஒப்பந்த பணிகள் முடிவுறுத்தப்பட்டிராத காரணத்தால் 2014 மார்ச் 06 ஆந் திகதி ஒப்பந்ததாரரின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 51 மில்லியன் தொகையான முற்பணங்களை மீள அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அது வரையிலும் செயலாற்றல் பிணையின் காலம் முடிவடைந்திருந்தமையால் அதனை காசாக்குவதற்கு முடியாது போயிருந்தது.

(iv) 2010 மார்ச் 16 ஆந் திகதி முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒப்பந்தம் தொடர்பில் மதியுரை நிறுவனத்தின் தலையீடொன்று இல்லாதிருந்ததுடன், அந்தக் காலத்திற்காக ரூபா 14 மில்லியன் மதியுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய மதியுரைக் கட்டணங்களில் அந்த ரூபா 14 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், அந்த பணத்தை அறவிடாது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 27 மில்லியன் மதியுரைக் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தன.

(v) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 43 மில்லியன் கிரயமுடைய உபகரணங்கள் 02 வருடங்களாக செயலற்று வேலைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரரால் கொள்வனவு செய்யப்பட்ட வளிச் சீராக்கி இயந்திரம், துணி துவைக்கும் இயந்திரம் மற்றும் தீயணைக்கும் இயந்திரம் போன்ற இயந்திரங்கள் காலங்கடந்து உத்தரவாதக் காலமும் நிறைவடைந்திருந்தது. வேலைத்தளத்தில் காணப்படும் ஏனைய பொருட்களும் சேதத்திற்குள்ளானவாறு காணப்படுவதுடன், கட்டிடமானது பாழடைந்து காணப்படுகின்றமை மருத்துவமனையின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையக்கூடுமென்பது அவதானிக்கப்பட்டது.

(vi) இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த கட்டுமானத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கமைய இலங்கை அரச பொறியியில் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 743 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2017 மே 31 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 398 மில்லியனில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டிடத்தின் எஞ்சிய நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 743 மில்லியன் அதாவது முதலாவது மதிப்பீட்டினைப் போன்று இரு மடங்கிற்கு அண்மிய தொகையொன்றை செலவிட நேர்ந்திருந்தது.

**(இ) அமைச்சிற்காக புதிய கட்டிடத் தொகுதியொன்றினை நிர்மாணித்தல்**

---

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கீகாரத்திற்கு அமைய எடுக்கப்பட்டிருந்த 2014 ஒக்தோபர் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கையளிக்கப்பட்ட நிர்மாணத்தின் அடிப்படையில் ரூபா 3,896 மில்லியனான வரியுடனான ஒப்பந்தப் பெறுமதிக்கு அமைச்சிற்காக புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்திற்கு 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டிடத்தின் வரைபிற்கு மாநகர சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், செயற்திட்டத்திற்காக சாத்தியவள கற்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக் கையளிப்புக் கடிதத்திற்கமைய செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியான 2016 ஒக்தோபர் 29 ஆந் திகதியளவில் பணிகளை நிறைவு செய்வதற்காக 2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய மொத்த நிதியேற்பாடு ரூபா 3,896 மில்லியனான போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான நான்கு வருடங்களிலும் இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 1,432.6 மில்லியன் மாத்திரமானமையாலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 900.2 மில்லியன் மாத்திரமானமயாலும், உரிய திட்டமொன்றிற்கமைய உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டிடத்திற்காக ஆழ்துளை மட்டும்

இடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் தாமதக் காலம் அத்திகதியில் உள்ளபடியாக 1 வருடமும் 02 மாதங்களாகும்.

(iii) இந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் காரணமாக அண்மையில் அமைந்துள்ள காசல் வீதியின் பெண்கள் மருத்துவமனையின் 04 வாட்டுகளினதும், பிரசவ அறைகளினதும் குழந்தைகள் அவசர சிகிச்சை பிரிவினதும் அறுவைச்சிகிச்சைக் கூடங்களினதும் சுவர்களில் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. அந்த வாட்டுகளின் சிலவற்றில் மாத்திரம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த இடங்களும் மீண்டும் வெடிப்புக்களுக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் ஏற்பட்டுள்ள நட்டத்தினை மீள் நிரப்புவதற்கு உரிய ஒப்பந்ததாரருடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தமை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

(iv) அமைச்சு தற்போது இயங்கும் சுவசிரிபாய கட்டிடத்தில் நிலவும் இடவசதி போதாமையால் புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் 2015 மே 01 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு ரூபா 108 மில்லியன் தொகையான வரி நீக்கலான தொகைக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த கட்டிடமானது தொடர்ந்தும் வாடகைக்கு எடுக்க நேருமென அவதானிக்கப்பட்டது.

## 2.4 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

2017 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மற்றும் குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் பின்வரும் செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 75,119.69 மில்லியனான நிதியேற்பாடுகளில் ரூபா 55,842.4 மில்லியன் நிதியேற்பாடு அமைச்சினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டவாறு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 19,277.29 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் 25.66 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

### 2.4.1 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கம்பளை ஆதார வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவு, அறுவைச் சிகிச்சைக்கூடம் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆகியவற்றின் நிர்மாணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 4.2.3 ஆம் பந்திக்கமைய, மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 371 மில்லியனான இந்த நிர்மாண செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் ஆகக் குறைந்தது 03 வாரங்கள் முதல் ஆகக்கூடியது 12 வாரங்கள் வரையான காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்காக 54 வாரங்களான காலம் கடந்திருந்தது.

(ii) செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த 09 விலைக் கேள்விகளில் ரூபா 270 மில்லியனான ஆகக்குறைந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்திருந்த கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்தது. பிரதான ஒப்பந்ததாரராக ரூபா 250 மில்லியனுக்கு

குறையாத சமமான தன்மையுடைய நிர்மாண செயற்திட்டமொன்று கடந்த 05 வருடங்களினுள் 12 மாதங்களில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட வேண்டியமை ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக தகுதியினை பெறுவதற்கு விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளில் ஒன்றாகும். எனினும், ஒப்பந்ததாரரால் விலைக் கேள்வி ஆவணங்களில் முன் தகைமையாக தம்மால் நிர்மாணிக்கப்படுவதாக முன்வைக்கப்பட்டிருந்த மத்திய மாகாணத்தின் செயலகக் கட்டிடத்தின் நிர்மாணமானது மற்றொரு கம்பனியால் மேற்கொள்ளப்பட்டதென்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iii) அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 5.3.19 ஆம் பந்திக்கமைய கட்டணமற்ற பராமரிப்பு காலத்தின் பின்னர் ஐந்து வருடங்களின் பராமரிப்பு கிரயம், மதிப்பீட்டு எடுகோள்களாக விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் அந்த எடுகோள்களை மதிப்பாய்வு செய்யாது தமது பரிந்துரைகளை வழங்கியிருந்தனர்.

(iv) விலைக்கேள்வியாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக்கேள்வி காப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த விலாசம் மற்றும் விலைக்கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசம் ஆகியவற்றிலான வேறுபாடுகள் தொடர்பில் விலைக்கேள்வி மதிப்பாய்வின் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(v) பெறுகைகள் குழுவின் தீர்மானத்திற்கமைய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 06 மாதங்களினுள் அனைத்து ஒப்பந்த பணிகளுக்கும் பொறியியலாளரின் முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) ஒப்பந்தத்தை கையளிக்கும் கடிதத்தின் பிரகாரம், 2018 நவம்பர் 13 ஆந் திகதியளவில் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 154 நாட்கள் கடந்திருந்த போதிலும், ஒப்பந்ததாரரால் காப்பீட்டு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயலாற்றல் பிணைமுறியொன்று முன்வைக்கப்படாமையால் மதியுரை நிறுவனத்தால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு 2018 சனவரி 23 ஆந் திகதி பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையலும் செயற்திட்டத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டோ அல்லது ஒப்பந்தமானது இரத்தச் செய்யப்பட்டோ இருக்கவில்லை.

(vii) மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கையேட்டின் 1.2.1 பந்தியின் பிரகாரம் போட்டி அடிப்படையில் வழங்குநர் ஒருவரை தெரிவு செய்யாது பொறியில் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு மதியுரை சேவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 யூலை 03 ஆந் திகதி வரையிலும் மதியுரை சேவைக் கட்டணங்களாக ரூபா 15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(viii) அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 2.9.1 ஆம் பந்திக்கு முரணாக செயற்பட்டு இந்த பெறுகையானது சாதாரண கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டதாக குறித்த குழுவின் குறிப்புரைகளுக்கமைய உறுதிப்படுத்தப்படாதுள்ள போதிலும் 09 பெறுகைகள் குழு அங்கத்தர்வர்களுக்கு ரூபா 98,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) முல்லேரியா ஆதார மருத்துவமனையின் தேசிய பக்கவாத நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான பெறுகைகள் தொடர்பான பரிசோதனை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது தேசிய திட்டமிடல் திணைக்களத்தினாலும் 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையினாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த மொத்தக் கிரய மதிப்பீடானது ரூபா 543 மில்லியனான இருந்ததுடன், 04 மாடிகளைக் கொண்ட கிழக்கு கொழும்பு ஆதார மருத்துவமனையின் தேசிய பக்கவாத நிலையமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 04 தளங்கள் 06 தளங்கள் வரையும், மொத்தக் கிரய மதிப்பீடானது ரூபா 543 மில்லியனிலிருந்து ரூபா 1.746 மில்லியன் வரையிலும் அதிகரித்தமைக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகைகள் திட்டத்திற்கு அல்லது வருடாந்த செயலாற்றல் திட்டத்தினுள் இந்த செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 4.2.3 பந்திக்கமைய பெறுகையானது ஆகக் குறைந்தத 03 வாரங்களிலிருந்து ஆகக்கூடியது 10 வாரங்கள் வரையான காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், இதற்காக 60 வாரங்கள் எடுக்கப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 2.11.3 பந்திக்கடைய தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கையினை சரியாக வழங்காமையால் ஏற்பட்டிருந்த தாமதமானது 05 வாரங்களாகும். விசேட காரணமொன்றில்லாது ஒப்பந்தக் கையளிப்பிற்கான கடிதம் வழங்கப்பட்டிருந்தமையால் கடந்த காலமானது 10 வாரங்களாகும்.

(v) மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கையேட்டின் 1.2.1 பந்திக்கமைய போட்டி அடிப்படையில் வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்படாது, பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்திடமிருந்து மதியுரை சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதியுரை சேவைக் கட்டணங்களாக ரூபா 41 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) சுகாதார அமைச்சிற்காக டெஸ்க் டொப் வகையிலான 95 கணனிகள் கொள்வனவு தொடர்பான பெறுகை**

---

2015 மே முதல் சனவரி வரையான காலப்பகுதியில் அமைச்சின் வெவ்வேறு பிரிவுகள் மூலம் கோரப்பட்டிருந்த டெஸ்க் டொப் வகையிலான 95 கணனிகளை சந்தை ஒப்பீட்டு முறைமை மூலம் கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 4 பெறுகைகளுக்குரிய முதலாவது கட்டளை 4 சந்தர்ப்பங்களிலும் அடுத்த கட்டளையின் 3 சந்தர்ப்பங்களிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 13,256,640 ஆக இருந்தது. இது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3 வழிகாட்டலின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகைக்காக மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1(ஊ) மற்றும்(எ) வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு மற்றும் தெரிவு செய்யும் செயற்பாட்டின் வெளிப்படைத் தன்மை மற்றும் சரியான தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் கேள்விதாரரால் வழங்கப்படும் தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி திறத்தல் பெறுகை குழுவினால் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பொருத்தமான குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் வழங்கல் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரினால் கேள்வி திறக்கப்பட்டிருந்தது.

(iii) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி திறத்தல் தொடர்பாக செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்ட மாதிரி படிவமொன்றில் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை.

(iv) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் 04 பெறுகை சந்தர்ப்பங்களின் போது பெறுகை தீர்மானங்கள் பெறுகை குழுவினால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் (வழங்கல்) இனால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அமைச்சின் பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 ஏப்ரல் மாதம் வரையில் 95 கணனிகளின் தேவைப்பாடு இனங்காணப்பட்டிருந்த போதிலும், அத்தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக ஒரே தடவையில் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அப்பெறுகை 04 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டமையால் 95 கணனிகள் ஒன்று ரூபா 132,000 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் 24 கணனிகள் மாத்திரம் ரூபா 132,000 வீதம் கொள்வனவு செய்யப்பட்டு 25 கணனிகள் ரூபா 149,000 வீதமும் 46 கணனிகள் ரூபா 138,340 வீதமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 716,640 ஆக இருந்தது.

(vi) 17 கணனிகளை கொள்வனவு செய்வதற்காக 2016 ஏப்ரல் 11 ஆந் திகதி கேள்வி கோருவதற்கு விபரமாக பொறுப்பேற்றலை தெரிவித்திருந்த குறைந்த கூறுவிலை ரூபா 128,500 வீதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விதாரர் மென் பொருளுக்காக ரூபா 33,000 தொகை மேலதிக தொகையொன்று கோரப்பட்டதாக குறிப்பிடப்பட்டு அக்கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டாவது குறைந்த கேள்வியான ரூபா 149,000 சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி தாரர்களிடமிருந்து 17 கணனிகள் மீண்டும் கட்டளையிடப்பட்டு 8 கணனிகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் குறைந்த கேள்விதாரரால் மென் பொருளுக்காக ரூபா 33,000 மேலதிக தொகையொன்று கோரப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட 25 கணனிகளுக்காக ரூபா 512,500 கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருத்துவ வாயு வழங்கல் பெறுகை செயற்பாட்டில் காணப்பட்ட பலவீனங்கள்**

---

அரசாங்க வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைக் கூடம், முதிர்வடையாத மழலைப் பிரிவு மற்றும் வார்ட் போன்ற வெவ்வெறு பிரிவுகளில் நோயாளர்களுக்கு தேவையான Medical Oxygen, Medical Breathing Air, Nitrous Oxide, Carbon Dioxide மற்றும் Liquid Nitrogen போன்ற எரிவாயு மற்றும் திரவ வாயு மற்றும் மருத்துவ வாயு என்பன குறிப்பிடப்படுவதுடன் மருத்துவ வாயு வழங்கல் பெறுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மருத்துவ வாயு மற்றும் மருத்துவ வாயு வழங்குனர்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறையொன்று இனங்காணப்படாதிருந்ததுடன், நேரடியாக நோயாளிக்கு வழங்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட ஒட்சிசன் உட்பட மருத்துவ வாயு வகை உரிய தரத்திலுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய 39 அரச வைத்தியசாலைகளுக்கு ரூபா 371 மில்லியன் மொத்த கிரயத்திலான மருத்துவ வாயு வழங்கும் பெறுகையின் போது அதுவரை காணப்பட்ட தனியுரிமையை வீழ்த்தி 39 அரச வைத்தியசாலைகளில் 32 இற்கு மருத்துவ வாயு வழங்கல் ஒப்பந்தம் புதிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், புதிய வழங்குனரிடம் போதியளவு உற்பத்தி இயலளவொன்று (Manufacturing Capacity) பாதுகாப்பு இருப்பு, திரவ வாயுக்களை களஞ்சியப்படுத்தவதற்கான தாங்கி, போக்குவரத்து, வசதிகள் மற்றும் நிதிசார் இயலுமைகள் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் 06 வைத்தியசாலைகளுக்குரிய ஒப்பந்தம் மீண்டும் பழைய ஒப்பந்தகாரருக்கே வழங்குவதற்கு நேர்ந்தது.

(iii) அமைச்சிற்குரிய 39 வைத்தியசாலைகளுக்காக மருத்துவ வாயுவை பெற்றுக் கொள்வதற்கு ஒரே தடவையில் கேள்வி கோரும் இயலளவு காணப்படும் போது 39 வைத்தியசாலைகளுக்காக வேறாக தேசிய போட்டி கூறுவிலை கோரல் ஒன்றும் இந்த பெறுகைகளுக்குரிய 07 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு 07 அங்கத்தவர்களும் பெறுகை குழுவின் 03 அங்கத்தவர்களும் கூடி 39 அரச வைத்தியசாலைகளுக்காக தனித்தனியாக கூடி 39 பெறுகை தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டு அறிக்கைகளுடன் இணைத்து உரிய குழுவிற்கு சமுகமளித்ததற்காக ரூபா 1,251,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஒரே தடவையில் கேள்வி கோரப்பட்டிருந்ததால் கொடுப்பனவு செய்வதற்கு நேரும் தொகை ரூபா 209,000 மாத்திரமாக இருந்தது. அதன்பிரகாரம் ரூபா 1,042,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வலிப்பு நோய் வைத்தியசாலைக்காக நோயாளர் அவதானிப்பு மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு**

---

காக்கை வலிப்பு வைத்தியசாலைக்காக உள்நாட்டு வரி, சுங்கக் கட்டணங்கள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் உட்பட மொத்த கிரயம் ரூபா 732.77 மில்லியனான மருத்துவ Magnetic Resonance Imaging Scanner (MRI), Single Proton Emission Tomography Scnner (PET – CT) மற்றும் Digital Subtraction Angiography System (DSA) இயந்திரங்களை -- மற்றும் -- என்ற இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இப்பெறுகைக்காக முதலாவது தடவையில் 2013 ஆம் ஆண்டின் போது சர்வதேச போட்டி கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேள்வி கோரலுக்காக வெளியிடப்பட்ட விளம்பரங்களிலும் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாத வழங்குனர்களுடன் செயற்படுவதை அரசாங்க நிறுவனங்களுக்கு தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் அப்பதிவுகளை சமர்ப்பிக்காத 04 கேள்விதாரரின் கேள்வியை மதிப்பிடுவதற்காக ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

(iii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி செயலாளரினால் வழங்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழ் வழங்குனரால் சமர்ப்பிக்கப்படாததை கருத்திற் கொண்டு முதலாவது பெறுகை நிராகரிக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது பெறுகையின் போது ஒப்பந்தம் பொதிகளாக்கப்பட்டு (Contract Package) கேள்வி கோரப்பட்டிருந்தது. இரண்டு பெறுகை சந்தர்ப்பங்களுக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் ஒரே நபர்களாக இருந்ததுடன், இரண்டாவது பெறுகையின் போது MRI மற்றும் SPECT இயந்திரங்கள் ஒரு பொதியின் கீழும் PET-CT இயந்திரம் வேறான பொதியொன்றின் கீழும் விலை கோருவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கேள்வி கோரல் பதிவேட்டில் முதலாவது பகுதியின் (Section -I) இல் உள்ளடக்கப்பட்ட கேள்வி தரவு பத்திரத்தின் (Bid Data Sheet) இன் 11.1(k) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு இயந்திரத்திற்காக, கேள்வி ஆவணங்களுடன் கேள்விகோரும் காலத்திற்கு செல்லுபடியாகும். Us.Food and Drug Administration Certificate வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் MRI மற்றும் PET-CT இயந்திரங்களுக்கான கேள்வி ஆவணங்களுடன் அச் சான்றிதழின் மூலப்பிரதிக்கு பதிலாக கேள்வி கோரியிருந்த 2014 ஒக்தோபர் மாதத்திற்கு செல்லுபடியாகாத சான்றிதழின் நிழற்பட பிரதியொன்றை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.2 வழிகாட்டலின் பிரகாரம் இது பாரிய விலகலொன்றாக இருப்பதால் கேள்வி நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும், சகல விவரக்குறிப்புக்களையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதி வழங்குனருக்கு பெறுகை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(v) கிரயம் ரூபா 583.39 மில்லியனான MRI, SPECT மற்றும் PET-CT இயந்திரங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுகின்ற இயந்திர மாதிரிகளின் முதலாவது தடவை 2010 ஆம் அல்லது அதன் பின்னர் ஆண்டொன்றில் (A model First introduced in 2010 or later) அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்தியொன்றாக இருக்க வேண்டியதுடன் உபகரணங்களின் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின் பிரகாரம் அவ்விவரக்குறிப்புகள் தீர்மானிக்க கூடிய காரணியாக (Critical factor) ஆக

இருந்தது. எவ்வாறாயினும், வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி ஆவணங்களில் அவ்வியந்திரங்கள் முதல் தடவையாக எந்த வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதனை திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.2 வழிகாட்டலின் பிரகாரம் இது பாரிய விலகலொன்றாக இருப்பதால் கேள்வி நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும், சகல விவரக்குறிப்புகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதி அவ்வழங்குனருக்கு பெறுகை வழங்கல் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(vi) SPECT இயந்திரத்திற்காக கூறுவிலை ஒரு கேள்விதாரர் மாத்திரமே சமர்ப்பித்திருந்ததுடன் அக்கூறுவிலையில் உள்ளடக்கப்பட்ட Sambia E Dual வகையான SPECT இயந்திரம் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின் தீர்மான காரணிகளுடன் இனங்காமையால் (Not complied) கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்திற்குப் பதிலாக பெறுகைக்காக கேள்வி கோரல் முடிவடையும் வரை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படாத இயந்திரமொன்றான Symbia Evo Excell வகையான SPECT இயந்திரமொன்று தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் எழுத்துமூலம் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்ட இயந்திரத்தின் கூறுவிலை பெறுமதிக்கு (அ.டொலர் 410,050) அக்கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய போட்டி கேள்விதாரர்களுக்கு கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு இங்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.7.1 வழிகாட்டலுக்கு முரணாக பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கேள்விதாரர்களுடன் நேரடித் தொடர்பு பேணப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(vii) கொள்வனவு செய்யப்பட்ட DSA இயந்திரத்திற்காக ஆரம்ப தொழில்நுட்ப விதிந்துரைகள் தேவைப்பாடான US Food and Drug Administration Certificate பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததாக சான்றுகள் கண்டறியப்படாதிருந்ததுடன் கூறுவிலை நிபந்தனைகளுக்கு முரணாக, இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமான வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய 248,195 அமெரிக்க டொலரிலான இயந்திரம் மற்றும் அத்தியாவசிய உதிரிப்பாகங்களின் (Plant and Mandatory Spare Parts Supplied from Abroad) கிரயம், கூறுவிலை மதிப்பீட்டின் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய உதிரிப்பாகமான UPS உபபாகம் எவ்வித பெறுகை செயற்பாடொன்றில்லாமல் ரூபா 3,973,649 ஆன மேலதிகக் கிரயத்தின் கீழ் அவ்வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(viii) கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் PET-CT இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமான வெளிநாடொன்றினால் வழங்கப்படுகின்ற இயந்திரம் மற்றும் அத்தியாவசிய உதிரிப்பாகங்களின் (Plant and Mandatory Spare Parts Supplied from Abroad) தொடர்பாக உரிய வழங்குனரால் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட வேண்டியதுடன் கேள்வி மதிப்பீட்டின் போது அந்த அத்தியாவசிய உபகரணங்களின் கிரயம் கூறுவிலையுடன் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். அதன் கீழ் வழங்குனரால் PET-CT இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமான UPS உதிரிப்பாகங்களுக்கான விலை விபரங்கள் கூறுவிலைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு உள்ளடக்கப்படாதிருந்தமை தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு கருத்திற் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக PET-CT இயந்திரத்திற்காக எவ்வித பெறுகை செயற்பாடொன்றில்லாமல் ரூபா 4,006,132 ஆன மேலதிக

கிரயமொன்றின் கீழ் PET-CT இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியிடமிருந்தே UPS உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த UPS உபபாகங்கள் வேறாக பெறுகையொன்றாக செயற்திட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் செயற்திட்ட பெறுகை குழுவொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய குழுக்களை மாற்றுவதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் கம்பனியொன்றுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 04 கதிர் தொழில்நுட்பவியாலர்கள், 08 கதிர் தொழிற்பாட்டு வல்லுனர்கள், 04 உயிர் மருத்துவ பொறியியலாளர்களுக்காக இயந்திரங்கள் வழங்கிய கம்பனியால் வழங்குவதற்கு இணங்கியிருந்த வேலைத்தளத்தில் பயிற்சி (onsite Training) மற்றும் இயந்திரத்தை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு முன்னர் (Before Commissioning of the Medical Imaging Equipment) வழங்குவதற்கு இணங்கியிருந்த வலிப்பிற்கு சிகிச்சை வழங்கும் நரம்பியல் நிலையமொன்றில் 2 வார வெளிநாட்டு பயிற்சி (Training for a peroid of 02 weeks at an overseas Neurology Centre) 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பயிற்சியை பூர்த்தி செய்வதற்கு முன்னர் நோய் அவதானிப்பு இயந்திரங்களுக்காக செலுத்த வேண்டிய முழுத்தொகையும் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(x) PET-CT Scan இயந்திரத்தின் பரிசோதனைக்காக Fludeo xyglucose (FGD) பெயருடைய கதிர் பொருட்கள் அத்தியாவசிய காரணியொன்றாக இருந்ததுடன் அப்பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு வேலைத்திட்டமொன்று இல்லையாதலால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் அந்த FGD பெயரிலான கதிர்ப்பொருட்கள் வழங்குவதற்கு இணங்கியிருந்தது. PET-CT இயந்திரம் 2016 ஒக்தோபர் வரையில் செயற்பாட்டு நிலைமையில் (Commissioning) நியமிக்கப்பட்டிருந்த போதிலும், FGD பெயரிலான கதிர்வீச்சுப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தாமையால் இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் வலிப்பு நோய் சிகிச்சை முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xi) PET-CT, SPECT மற்றும் DSA இயந்திரங்களின் முறையான செயற்பாட்டிற்காக தேவையான மதிப்பிடப்பட்ட சேர்க்கப்பட்ட பெறுமதி ரூபா 19.667 மில்லியனான இரசாயன ஆய்வுகூட மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமை காரணமாக ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அந்த 03 இயந்திரங்கள் முறையாக பயன்படுத்த முடியாத பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xii) இயந்திரங்களுக்காக வழங்குனரினால் இணங்கியிருந்த உத்தரவாதக் காலம், இயந்திரம் நிறுவப்பட்ட திகதிமுதல் 36 மாதங்களோ அல்லது உபகரணம் வழங்கப்பட்ட திகதி முதலில் 39 மாதங்கள் ஆகிய இரண்டில் முதலாவது தினத்தில் முடிவடைகின்றது. (36 months from date of installation or 39 months from date of delivery, whichever is earlier) அதன் பிரகாரம் குறித்த உத்தரவாதக்காலம் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முடிவடைந்த போதிலும் PET-CT இயந்திரத்திற்கு தேவையான Fluxdeoxyglucose (FGD) மூலப்பொருள் இல்லாமையால் PET-CT, SPECT மற்றும் DSA இயந்திரங்களின் முறையான

செயற்பாட்டிற்காக தேவையான ஆய்வுகூட மற்றும் ஏனைய உபகரணங்கள் இல்லாமையால் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றின் முறையான செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் உத்தரவாத காலத்தின் 24 மாதங்கள் கடந்திருந்தன.

(xiii) MRI இயந்திரத்தின் Cold Head பகுதியில் அடங்கியுள்ள Liquid Helium அளவு தேய்வடைந்துள்ளதாக வழங்குனரால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பொறுப்பான வைத்தியசாலை பதவியணியினரால் அந்நிலைமை வழங்குனருக்கு உடனடியாக அறிக்கையிடப்படாமையால் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படாமல் இந்நிலைமைக்கு காரணமாக இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. வழங்குனருடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பொதுவான நிபந்தனை 23.5 (Sub Clause 25.3 of the General Condition of the Contract) இன் பிரகாரம் இந்த நிகழ்வு இயந்திரத்தின் தொழிற்பாடு ஏற்றுக்கொள்ளல் (Operational acceptance) 2017 மார்ச் 06 ஆந் திகதிக்கு முன்னர் இடம்பெற்றமை தொழில்நுட்ப விவரக்குறிப்பு 15 ஆம் இலக்கத்தின் பிரகாரம் இயந்திரத்தின் Liquid Helium மட்டத்தை கண்காணித்தல், மீண்டும் நிரப்புதல் செலவினம் 05 ஆண்டு பராமரிப்பு செலவினத்தின் கீழ் உரிய வழங்குனரால் செலவிடப்பட வேண்டிய இது தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும்,இந்நிபந்தனைகள் கருத்திற் கொள்ளாமல் இயந்திரத்தை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக 2017 மே 31 ஆந் திகதி தேசிய வைத்தியசாலையால் ரூபா 895,000 உரிய வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஊ) பொலன்னறுவ மாவட்ட பொது வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பான பெறுகை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புதிய வெளிவாரி நோயாளர் பிரிவின் கட்டிடத்திலிருந்து சத்திரசிகிச்சை வார்ட் வரையான விராந்தை நிர்மாண ஒப்பந்தத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான காரணமொன்றை முன்வைக்காமல் குறைந்த பெறுமதியுடன் கூடிய 03 கூறுவிலைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. குறைந்த கேள்வியிலிருந்து ரூபா 379,508 ஆல் அதிகரித்து ரூபா 4,702,110 ஆன கூடிய கேள்வியை முன்வைத்திருந்த ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், விராந்தை நிர்மாணிப்பதற்கு உரிய ஆய்வொன்று இல்லாமல் முதலாவது தயாரிக்கப்பட்டிருந்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகளுக்கு இணங்கும் வகையில் அத்திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காக முறையான எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்வாகக் கட்டிடத்தின் திருத்த வேலைகள் 11 ஆம் கட்டத்திற்குரிய ஒப்பந்தம் 2016 நவம்பர் 16 ஆந் திகதி ரூபா 9,928,888 இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 05 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் உரிய செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாதென எழுத்துமூலம் வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 சனவரி 02 ஆந் திகதி செல்லுபடியாக இருந்த ரூபா 180,000 கேள்விப் பாதுகாப்பினை பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அங்கவீன சிகிச்சை கட்டிடங்களை மேம்படுத்துவதற்கும் பிரேத அறையை திருத்தியமைப்பதற்குமாக 2 செயற்திட்டங்களுக்குரிய வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், இறுதிப்பட்டியல் கொடுப்பனவு செய்யும் போது அத்திகதியில் நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 628,486 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(எ) மாத்தறை பொது வைத்தியசாலை பெறுகை**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டிற்காக மாத்தறை பொது வைத்தியசாலையால் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காமைக்கான சான்றுக் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டின்போது ஆய்வுகூட சேவை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 17,742,291 ஆன நிதிஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக கிடைத்திருந்த ரூபா 22,823,600 நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 6,504,955 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்காக உயிர் மருத்துவ பொறியியலாளர் சேவைகள் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 126.15 மில்லியனான 43 மருத்துவ உபகரணங்கள் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 14 மில்லியன் நிதிஏற்பாடு மாத்திரம் கிடைத்திருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) மாத்தறை பொது வைத்தியசாலைக்காக அத்தியவசியதாகத் தேவைப்படும் 08 Venliktor JCU Adults and Pead உபகரணங்கள் வழங்கமாறு உயிர் மருத்துவ பொறியியலாளர் சேவைகள் பிரிவிற்கு 2017 பெப்ரவரி 04 ஆந் திகதி வேண்டுகோள் விடப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி வரையிலும் அந்த உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டில் மாத்தறை பொது வைத்தியசாலைக்காக தேவையான 4 மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 2017 நவம்பர் 15 ஆந் திகதி அளவில் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2018 சனவரி 19 ஆந் திகதி வரையிலும் கொள்வனவுக் கட்டளை வழங்கப்படாமல் இருந்ததுடன் அதுவரை கேள்வி பிணைப்பொறுப்பின் காலம் முடிவடைந்திருந்தது. மேலும் 2017 திசெம்பர் 02 ஆந் திகதி வரை 7 மருத்துவ உபகரணங்களுக்காக கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி 19 ஆந் திகதி வரை செயலாற்றல் பிணைப் பொறுப்பினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(vi) மாத்தறை பொது வைத்தியசாலையுடன் இணைந்த நிறுவனத்திற்காக 2017/2018 ஆண்டிற்காக சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்காக கேள்விகோரல்

2016 மார்ச் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இரண்டாவது குறைந்த கூறுவிலைக்காக உழைப்பு கிரயத்தை கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற கணித ரீதியான தவறு திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன் அவ்வாறு செய்திருந்தால் தெரிவு செய்த கேள்விதாரரை விட அக்கேள்வியின் பெறுமதி ரூபா 27,662,074 ஆல் குறைந்திருக்கும் என கருத்திற் கொள்ளப்படாமல் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

- இரண்டாவது குறைந்த கூறுவிலையான ரூபா 63,223,000 சமர்ப்பித்திருந்த கேள்விதாரரால் ஊழியர் ஒருவரின் ஆகக் குறைந்த சம்பளத்தை விட குறைந்த கூறுவிலையொன்று சமர்ப்பித்ததை அடிப்படையாகக் கொண்டு அவரின் கூறுவிலை நிராகரிக்கப்பட்டு ரூபா 75,119,731 தொகையான கூடிய கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், தொழிலாளர் ஒருவரின் ஒரு நாள் சம்பளம் ரூபா 540 ஆக இருப்பதால் இரண்டாவது குறைந்த கேள்விதாரர் நாள் சம்பளம் 560 என கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததால் அவரின் கூறுவிலை அந்த நியதிகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு நிராகரிக்கப்பட்டதென கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு செய்யும் போது சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்வி வருடாந்த மதிப்பீட்டிற்குள் காணப்படல், கடந்த ஆண்டுகளின் விலைக்கு ஒப்பாக நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்தில் கேள்வி காணப்படுதல் மற்றும் இரசாயன பொருட்களின் விலை விலை வபரங்கள் சந்தையின் பொதுவான விலை விபரங்களுக்கு நியாயமான பெறுமதிகளாக இருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கேள்வி மதிப்பீட்டின் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- கூடிய கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வியில் தொடர்பான பொது மேந்தலைக் கிரயம் ரூபா 6,119,731 ஆல் குறைத்து ரூபா 68,999,877 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மேந்தலை கிரயத்தினுள் எந்த கிரயத்திற்கு உரிய கேள்வி பெறுமதி கழிக்கப்பட்டதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கடந்த ஆண்டின் பொது மேந்தலை கிரயத்திற்கு ஒப்பாக இந்த ஆண்டின் பொது மேந்தலை கிரம் 2,584 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

- வருடாந்த சேவைகளுக்கு தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 816,900 செலவாகுமென வைத்தியசாலையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கேள்விதாரரால் அதற்காக ரூபா 6,709,824 தொகை கேள்விக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. தேவையான உபகரணங்களை வைத்தியசாலை மூலம் கொள்வனவு செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அதற்காக அம் முழுத்தொகையையும் ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- பெறுகை நிபந்தனை இலக்கம் 32(1) இன் பிரகாரம் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் சேவை அடையாள அட்டையை அணிய வேண்டிய போதிலும், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு

மேற்பட்ட காலம் கடந்திருந்த 2018 சனவரி 11 ஆந் திகதி வரையிலும் இந்நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- ❖ ஊழியர்களுக்கான மேலதிக நேரப்படிகள் கொடுப்பனவு செய்வதற்கு தொகையொன்று கேள்வியில் உள்ளடக்கப்படவேண்டிய போதிலும் ஊழியர்களுக்காக மேலதிக நேரப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்காக ரூபா 2,121,057 ஆன மேலதிக நேர படிகளுக்காக பட்டியலிடப்பட்டிருந்தன.

- ❖ நிர்வாக செலவினம், அலுவலக பராமரிப்பு செலவினம் மற்றும் பங்குலாபமாக ரூபா 19,132,343 கேள்விக்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், ஊழியர்களுக்கு போதியளவு வசதிகளுடன் விசேடமாக பெண்களுக்கு ஆடைகளை மாற்றுவதற்கு அல்லது போதியளவு வசதிகளுடன் கூடிய அறையொன்றை பேணிச் செல்லப்படாமல் இருந்ததுடன் அதற்காக வைத்தியசாலை சொந்தமான மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்படும் கொட்டிலொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஏ) அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்காக உயிர் மருத்துவ பொறியியல் உபகரணங்கள் கொள்வனவுக்கான பெறுகை**

---

மீளாய்வாண்டில் ரூபா 11,549,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 வைத்திய உபகரணங்களுக்குரிய பெறுகை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகைகளுக்காக போதியளவு போட்டியொன்று இல்லாமையால் அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.12.1 வழிகாட்டலின் பிரகாரம் அனைத்து கேள்விகளும் நிராகரிக்கப்பட்டு 7.12.3 வழிகாட்டியின் பிரகாரம் மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பில் கருத்திற் கொள்ளாமல் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,089,478 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாமல் இருந்ததுடன் வரி விலக்கல் சான்றிதழ் பெற்றுக் கொண்டு 03 உபகரணங்களின் செல்லுபடித் தன்மை பரீட்சிக்கப்படாமல் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஐ) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பெறுகை**

---

(i) மீளாய்வாண்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்காக ரூபா 5,720,000 தொகையான பிரேதங்களை வைக்கும் 02 குளிர்சாதனப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) வழிகாட்டல்களின் பிரகாரம் உரிய விடயத்துறை தொடர்பாக மேலதிகமான அறிவினைக் கொண்ட ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவர் கைத்தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொண்டிருக்க

வேண்டிய போதிலும் அவ்வாறான அறிவினைக் கொண்டிராத அரச வைத்தியசாலையின் உயிரியல் பொறியியலாளர் உதவி உத்தியோகத்தரொருவர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

- ❖ அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.1(ஈ) வழிகாட்டல்களின் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரீட்சித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.7 வழிகாட்டல்களின் பிரகாரம் போதியளவு பொறுப்பேற்றலை தெரிவிக்கும் சகல கேள்விகளையும் விரிவாக மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய போதிலும் கேள்விகளை சமர்ப்பித்த 06 வழங்குனர்களுக்கிடையே ரூபா 1,430,035 மற்றும் ரூபா 5,720,000 ஆன ஆகக் குறைந்த இரண்டு கேள்விகளை சமர்ப்பித்திருந்த இரண்டு கேள்விதாரர்களின் கூறுவிலைகள் மாத்திரம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

- ❖ அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.19 வழிகாட்டல்களின் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நியதிகள் தொடர்பாக விஷேட கவனமொன்றைச் செலுத்தி கேள்வி மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். எனினும், அவ்வாறு செய்யாமல் ரூபா 1,430,035 ஆன குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த கேள்விதாரர் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பிரேத குளிர்சாதனப் பெட்டிகள் இலங்கையில் பயன்படுத்தப்படாததால் அதன் செயற்பாடு தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாதென நிராகரிக்கப்பட்டு இரண்டாவது குறைந்த கேள்வியான ரூபா 5,720,000 சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விக்கு பெறுகையை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது.

- ❖ மேலும், முதலில் தெரிவு செய்யப்பட்ட வகையொன்றில் பிரேதங்களை வைக்கும் குளிர்சாதனப் பெட்டிக்கு பொருத்தமான வகையின் பிரகாரம் விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்த அவதானிக்கப்பட்டதால் தொழில்நுட்ப குழு மூலம் பெறுகையின் சிக்கனம், செயற்திறன் மற்றும் நியாயத்தன்மை போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன்பிரகாரம் கூறுவிலையை நிராகரித்தன் மூலம் அரசிற்கு ரூபா 4,761,866 ஆன நிதி நட்டமொன்று இடம் பெற்றிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 21 ஆந் திகதி ரூபா 3,868,350 செலவு செய்து மட்டக்களப்பு வைத்தியசாலைக்காக சிகிச்சை கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்காக 850 கழிவுப்பொருள் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கட்டளை கிடைத்ததன் பின்னர் 05 வார காலங்களுக்குள் பொருட்களை கையேற்றல் இடம் பெற வேண்டிய போதிலும் அதற்காக 15 வாரங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தாமதக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,220,720 செலவிடப்பட்டு மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் வாட்களுக்காக 174 பக்க அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ எந்தவொரு வார்ட் ஒன்றிடமிருந்தும் தேவைப்பாட்டினை குறித்து எழுத்து மூல வேண்டுகோள் விடப்பட்டிருக்கவில்லை.

- ❖ அரசின் வைத்தியசாலையொன்றில் பிரதேச பெறுகை குழுவிற்கு சந்தை விலை ஒப்பிட்டு முறைமையின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆகக் கூடிய நிதி எல்லையான ரூபா ஒரு மில்லியனான மிகைத்து வைத்தியசாலையின் பிரதேச பெறுகை குழுவினால் இப் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- ❖ தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களின் பிரகாரம் பக்க அலுமாரிகள் முழுமையாக தேக்குமர பலகையினால் செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் வழங்கியிருந்த பக்க அலுமாரிகளின் சில பகுதிகள் தேக்கு அல்லாத போமிகா ஒட்டப்பட்டிருந்தாகவும் தேக்கு பலகையின் தன்மை வரும் வகையில் பூச்சு பூசப்பட்டிருந்தமை, வழங்கப்பட்டிருந்த பக்க அலுமாரிகள் சில பகுதிகள் இப்போதே உருக்குலைந்து இருந்தமை உள்ளக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

- ❖ இப் பெறுகை போதியளவிலான போட்டியொன்றுக்கு உட்படாதிருந்ததுடன் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையிலிருந்து விலகி சந்தை ஒப்பிட்டு முறைமை மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுகையாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு ஒரு கட்டிலுக்கு ரூபா 90,800 வீதம் ரூபா 11,622,400 செலவிடப்பட்டு சீர் செய்யக்கூடிய 128 கட்டில்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ அரசின் வைத்தியசாலையொன்றில் பிரதேச பெறுகை குழுவிற்கு சந்தை விலை ஒப்பிட்டு முறைமையின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆகக் கூடிய நிதி எல்லையான ரூபா ஒரு மில்லியனான மிகைத்து வைத்தியசாலையின் பிரதேச பெறுகை குழுவினால் இப் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- ❖ இப் பெறுகை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வருடாந்த பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வைத்தியசாலை வாட்களிலிருந்து கட்டிடங்களின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ சுகாதார, போசனை மற்றும் மருத்துவ அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவின் ஆலோசனைகளை பெற்றுக் கொண்டு சீர்படுத்தக் கூடிய (Ajustable) கட்டில்களின் விவரக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வைத்தியசாலை பணிப்பாளரான பெறுகை குழு தலைவரால் தாமதிக்கப்பட்டிருந்த விவரக் குறிப்புக்களுக்காக கட்டிலொன்றின் உலோகத்தின் தடிப்பு, பொருத்தப்படும் உலோக பகுதிகளுக்குரிய அளவுகள், செலவிடப்படக் கூடிய பார அளவு மற்றும் கட்டிலின் அளவு/கொள்ளவை தீர்மானிக்கும் போது சர்வதேச நியமங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை மூலம் கேள்வி தாரர்களுக்கு நியாயமான மற்றும் உள்ளவாறான மற்றும் போட்டி அடிப்படையில் பொறுப்பேற்றலை தெரிவிப்பதற்கு உள்ள

வசதிகள் மட்டுப்பட்டிருந்தன. அவ்வாறே முதலில் தெரிவு செய்த வழங்குனருக்கு பொறுப்பேற்க கூடிய வகையில் தொழில்நுட்ப விபரக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்தது.

- ❖ தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்த கேள்விதாரரின் கூறுவிலையை விட 50 சதவீத அளவிலான குறைந்த கேள்வியொன்றான ரூபா 5,126,000 தொகையான கேள்வி தொடர்பான 3 தொழில்நுட்ப விபரக் குறிப்புக்கள் தவறாக பரிந்துரை வழங்கப்பட்டு நிராகரிக்கப்பட்டமையால் அரசிற்கு ரூபா 5,657,000 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்தது.

- ❖ 11 ஆம் இலக்க விபரக் குறிப்பின் பிரகாரம் கேள்வியுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டில்களின் வர்ண நிழற்படங்களுக்கு சமனான கட்டில்களுக்குப் பதிலாக வேறு வகையான கட்டில்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களில் 20 கட்டில்கள் உடைந்திருந்தமை கட்டில்களின் இரண்டு பக்கங்களினதும் பாதுகாப்பு வேலி கட்டில்களின் மத்தியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் அக்கட்டில்களில் ஏறும் போதும் இறங்கும் போதும் உட்காரும் போதும் சிக்கல்களுக்கு உட்படுவதும் மெத்தை உறைகள் ரெக்சினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் துணியினால் தயாரிக்கப்பட்டிருந்ததாக 2017 மே 17 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(v) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்காக ரூபா 2,974,300 செலவில் 17 காற்றுச் சீராக்கிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ தேசிய இரத்த வடிகட்டல் சேவையினால் 2016 ஆம் ஆண்டின் போது வ/ப இலங்கை அரச வர்த்தகக் (பலநோக்கு) கூட்டுத்தாபனமிடமிருந்து 12,000 BTU இலிருந்து 48,000 BTU வரையான இயலளவுடன் கூடிய பெறுமானத்திலான 09 காற்று சீராக்கி இயந்திரங்கள் ரூபா 670,565 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த காற்று சீராக்கி இயந்திரங்களின் விவரக் குறிப்புக்களுக்கு சமனான விவரக் குறிப்புக்களுடன் கூடிய 12,000 BTU இலிருந்து 48,000 BTU வரையான இயலளவு பெறுமானமுடைய 17 சுற்றுச்சீராக்கி இயந்திரங்கள் போதனா வைத்தியசாலையால் வேறு வழங்குனர் ஒருவரிடமிருந்து மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கொள்வனவிற்காக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து (பலநோக்கு) கூறுவிலை கோரப்படாமல் இருந்ததுடன் அந் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்படாமை காரணமாக 11 இயந்திரங்களுக்காக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,049,036 ஆக இருந்தது.

- ❖ முறையற்ற மற்றும் பூரணமற்ற வகையில் தயாரிக்கப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் பெயர் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்றை பயன்படுத்தி தேவைப்பாட்டை ஒரே தடவையில் இனங்காணாமல் இக் கொள்வனவு இடம் பெற்றிருந்தது.

- ❖ இப் பெறுகை போதியளவில் போட்டியொன்றுக்கு உட்படாதிருந்ததுடன் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையிலிருந்து விலகி சந்தை

ஒப்பீட்டு (Shopping) முறைமை மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுகையாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(vi) ரூபா 50,625,600 ஆன மொத்தக் கிரய மதிப்பீட்டுடன் பல கட்டிடங்களில் பூர்த்தி செய்வதற்கு உத்தேச மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறை கட்டிட நிர்மாணத்தின் முதலாம் கட்டத்தின் ஒப்பந்தம் ரூபா 8,146,021 ஆன ஒப்பந்தம் பெறுமதியுடன் கூடியதாக வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

❖ மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரதேச பெறுகை குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ரூபா 8,147,081 தொகையான இப் பெறுகைக்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக சந்தை ஒபீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது.

❖ கேள்விகளைச் சமர்ப்பித்த 09 பேரும் சம தகைமைகளைக் கொண்ட வழங்குனர்களாக இருந்ததுடன், அவர்களுக்கு இடையே குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரின் கூறுவிலை பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 25.67 சதவீதம் குறைந்தது என்பதன் பேரில் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் கூறு விலை நிராகரிக்கப்படுவதற்கு முன்னர் அரச பெறுகை வழிகாட்டல் சேவையின் 7.9.11 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக்காரரின் அனுமான பகுப்பாய்வொன்றை கோரி பணியை நிறைவேற்றுவதற்கும் ஆபத்தை குறைப்பதற்காக கூடிய பெறுமதியுடனான மேலதிக செயலாற்றல் பிணையொன்று கோருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

❖ பொறியியலாளர் மதிப்பீட்டை விட 13.86 சதவீதத்தினை குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த இரண்டாவது குறைந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு தெரிவு செய்வதற்கு முன்னர் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11 வழிகாட்டியின் பிரகாரம் அனுமான பகுப்பாய்வொன்றை கோரி பணியை நிறைவேற்றுவதற்கு உள்ளஇயலுமையை கருத்திற் கொண்டு ஆபத்தை குறைப்பதற்காக கூடிய பெறுமதியுடனான மேலதிக செயலாற்றல் பிணையொன்று கோருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

❖ அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முதலாவது குறைந்த கேள்விதாரர் தெரிவு செய்வதற்கு உள்ள இயலுமை கருத்திற் கொள்ளப்படாமல் இரண்டாவது குறைந்த கேள்விதாரரை தெரிவு செய்வதன் மூலம் அரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 962,124 ஆக இருந்தது.

❖ 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஒப்பந்தங்கள் உரிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 60 நாட்களுக்குள் பொது ஒப்பந்த பதிவாளருக்கு சமர்ப்பிப்பது பதிவு செய்யப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) குருனாகல பொது வைத்தியசாலை**

சத்திர சிகிச்சை பொருட்களை வழங்குவதற்கான பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோருவதற்கு பதிலாக சந்தை ஒப்பிட்டு விலை முறைமை பின்பற்றப்பட்டு சத்திர சிகிச்சை பொருட்கள் வழங்காதிவர்களிடமிருந்து கேள்வி கோரிய காரணத்தினால் போட்டியிலிருந்து விலகி ஒரு கேள்விதாரரால்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி கருத்தில் கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,360,294 செலவிடப்பட்டு சத்திரசிகிச்சை பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2016/2017 ஆம் ஆண்டுகளுக்குரித்தாக தேசிய வைத்தியசாலைக்கு சமைக்காத, உலர் மற்றும் தயார் செய்யப்பட்ட பொருட்கள் வழங்கும் பெறுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனத்தின் போது உரிய விடயம் தொடர்பாக விசேட அறிவுடன் கூடிய நபர் ஒருவர் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் இப்பெறுகையினை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு போசணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.3 வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் பொருட்களின் சகல விபரங்கள் வழங்குனர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தேவைப்பாட்டு பதிவேடுகளில் காண்பிக்கப்படும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட வேண்டிய அறவிட்டு அலகுகளாக பைக்கற் மற்றும் டின்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு அலகுகளிலும் இருக்க வேண்டிய பார அளவு திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகைக்குரிய உணவுப் பொருட்கள் வகைளில் தேவைப்பாடு மாத்திரம் வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உணவுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக அல்லது உணவுப் பொருட்கள் உரிய அலகுகளாக காண்பிக்கப்பட்டிருந்த பைக்கற்றுக்களின் அல்லது டின்களின் பார அளவு வழங்குனர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) எதிர்ப்புச் சக்தியினை அதிகரிக்கும் போசாக்கு மேலதிகம், சிறுநீரக நோயாளர்களுக்கான போசாக்கு மேலதிகம், ஈரல் நோயாளிகளுக்கான மேலதிக போசாக்கு மற்றும் அதி சக்தி மேலதிக போசாக்கு போன்ற உருப்படிகள் பைக்கற்றுக்களாக மாத்திரம் சந்தையில் காணப்பட்ட போதிலும், கேள்வி ஆவணங்களில் அந்த உருப்படிகளின் தேவைப்பாடுகள் டின்களாகவும், நீரிழிவு நோயாளர்களுக்கான மேலதிக போசாக்கு மற்றும் கூடிய புரத போசாக்கு மேலதிகம் டின்களாகவும் மாத்திரம் சந்தையில் காணப்பட்ட போதிலும் ஆவணங்களில் அந்த உருப்படிகளின் தேவைப்பாடு பைக்கற்றுக்களாக முன்வைக்கப்பட்டிருந்தது.

(v) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி கொடுப்பதற்கு முன்னர் கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்படும் விபரங்களை பரீட்சிக்கும் போதும் வழங்குனரால் சமர்ப்பித்த கேள்வி மதிப்பீட்டின் போது அப் பொருட்களின் சந்தை நிலைமை தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமையால் மேலே குறிப்பிட்ட மேலதிக போசனைகளுக்குரிய பார அளவொன்று திட்டவட்டமாக குறிப்பிடாமை மற்றும் பைக்கற்று ரீதியாக கூறுவிலை சமர்ப்பித்த பொருட்கள் சந்தையில் டின்களாக காணப்பட்டமை மற்றும் டின்களாக கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள் சந்தையில் பைக்கற்றுக்களாக காணப்பட்டமை போன்ற விடயங்களில் வெளிப்படுத்த முடியாமல் இருந்தது.

(vi) நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் Impact பெயருடைய மேலதிக போசனைக்காக டின் ஒன்றின் குறைந்த கூறு விலை ரூபா 1,390 என சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு டின்னிற்கு அடங்க வேண்டிய பார அளவு

திட்டவட்டமாக குறிப்பிடப்படாமையால் சந்தையில் வழங்கப்பட்ட டின் ஒன்று என தொழில் நுட்பக் குழு கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(vii) நோய் எதிர்ப்புக்களை அதிகரிக்கும் Impact என்ற பெயருடைய மேலதிகம் -- ஒன்று ரூபா 1,390 வீதம் வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் 74 கிராம் அளவிலான 05 – பெக்கட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட தனி பொதியொன்றாக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒவ்வொரு சபே பக்கற்றுக்கள் 01 இற்காக ரூபா 1,390 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 05 சபே பெக்கட்டுக்களுடன் கூடிய Impact பொதியொன்றின் சந்தைத் சில்லறை விலை ரூபா 1,825 ஆக இருந்தால் 74 கிராம் சபே பைக்கற்றின் சந்தை விலை ரூபா 365 ஆக இருந்தது. எனினும் சபே பெக்க ஒன்றுக்காக வழங்குனருக்கு ரூபா 1,390 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் சந்தை விலை ரூபா 365 ஆக இருந்தது. எனினும் ஒரு சபே பைக்கற்றுக்காக வழங்குனருக்கு ரூபா 1,390 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் சந்தை விலைகளுடன் ஒப்பிடும் போது ஒரு சபே பைக்கற்றிற்காக ரூபா 1,025 வீதம் 2016 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2017 ஒக்தோபர் 19 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 23,304 Impact சபே பைக்கற்றுக்களான சந்தை விலையை விட கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 23,886,600 ஆக இருந்தது.

(viii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை கவனயீனமாக நடவடிக்கை எடுத்தமையால் விலை விபரங்களை மதிப்பீடு செய்யும் போது மேற்படி (v) மற்றும் vi இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக வெளிப்படுத்த முடியாமை மற்றும் தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவினால் 2015/2016 ஆம் ஆண்டிற்குரித்தாக வழங்கப்பட்ட Impact பணக் கொடுப்பனவின் பொது 05 சபே பக்கட்டுக்களுக்குரிய பொதியொன்றுக்காக, டின் ஒன்றுக்காக இணங்கப்பட்ட விலை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2016/2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட உரிய போசாக்கு மேலதிகத்திற்காக வழங்குனரால் ஒவ்வொரு சபே பைக்கற்றுக்காக ரூபா 1,390 வீதம் பட்டியலிடப்பட்டமை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் பணக் கொடுப்பனவிற்கு பரிந்துரைக்கப்படாமையால் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 25,914,048 ஆக இருந்தது.

(ix) அதிசக்தி உயர் புரோட்டீன் போசாக்கு மேலதிகமான கொள்வனவு செய்யப்பட்டிருந்த Pentasure 2.0 மற்றும் Pentasure Renal போன்ற மேலதிகமொன்றை வழங்குவதற்கு இனங்கானப்பட்டிருந்த விலைகள் முறையே பைக்கற் ஒன்றுக்காக ரூபா 1,060 மற்றும் ரூபா 839 ஆக இருந்த போதிலும் ஒரு பைக்கற்றுக்காக முறையே ரூபா 1,390 மற்றும் ரூபா 1,100 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்த தொகை முறையே ரூபா 240,900 மற்றும் ரூபா 39,933 ஆக இருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்துதல்

(i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் பொறி மற்றும் இயந்திரங்கள், நிர்மாணங்கள், கட்டிடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அலுவலக உபகரணங்கள் மற்றும்

தளபாடங்கள் தொடர்பாக பதிவேடொன்று மாத்திரம் பேணப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க பொதுத் திறைசேரியின் சுற்றறிக்கையின் பிரகாரம், கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன், 2018 ஆகஸ்ட் 17 வரையிலும் அப்பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததென அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி வாகனப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வாகனப் பயன்பாடு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வாகனப் பயன்பாடு தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சின் தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமான 251 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், அவ்வாகனங்களின் ஓடப்பட்டிருந்த கிலோமீற்றர் எண்ணிக்கை, அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் செலவினம் மற்றும் அவ்வாகனங்களின் சேவை விபரம், திருத்தம் மற்றும் காப்புறுதிச் செலவினம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிலிருந்தும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இவற்றில் முதலாவதாக ஏதாவது சந்தர்ப்பம் ஏற்பட்ட பின்னர் எரிபொருள் நுகர்வு மீள பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள் தவிர்ந்த செயற்பாடுகளிற்காக வாகனங்களை பயன்படுத்துதல்**

2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதிக் குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட 458 மோட்டார் வாகனங்கள் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 95 மோட்டார் வாகனங்களில் 28 அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளிற்காக 2017 சனவரி தொடக்கம் 2017 ஒக்தோபர் வரையான காலப்பகுதியின் போது பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 363 மோட்டார் வாகனங்கள் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளிற்காக

ஈடுபடுத்தப்பட்டிருந்ததென்பதை உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக வாகனங்களை பயன்படுத்துதல்**

---

- 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் 03 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சு அலுவலக பதவியணியினர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் பதவியணியினர் பயன்படுத்துவதற்கு உரித்துள்ள வாகன எண்ணிக்கையை விஞ்சி தற்போதைய கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சு அலுவலகப் பதவியணியினரிற்கு 15 மேலதிக வாகனங்களும் தற்போதைய கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலக பதவியணியினரிற்கு 08 மேலதிக வாகனங்களும் அமைச்சு செயலாளரால் ஒதுக்கப்பட்டிருந்தன.

- அமைச்சின் பாதுகாப்பு படையணியால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் 2017 சனவரி 01 தொடக்கம் 2017 யூன் 30 வரையான 06 மாத காலப்பகுதியின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சிற்கு வந்திருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்ததால் அவ்வாகனங்களின் பாவனை தொடர்பான கருத்துரை ஒன்றை சமர்ப்பிக்க முடியாதிருந்தது.

- 2017 சனவரி 01 தொடக்கம் 2017 யூன் 30 வரையான காலப்பகுதியின் போது 314 சந்தர்ப்பங்களில் அமைச்சுப் பதவியணியினர் மற்றும் பிரதி அமைச்சுப் பதவியணியினரிற்கு அமைச்சின் குழாம் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 314 சந்தர்ப்பங்களில் 102 சந்தர்ப்பங்களின் போது பிரயாணம் செய்திருந்த மொத்த தூரம் மற்றும் எரிபொருள் செலவினம் முறையே 56,182 கிலோமீற்றர் மற்றும் ரூபா 795,370 ஆக இருந்தது. மிகுதி 212 சந்தர்ப்பங்களுக்குரிய பிரயாணம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வாகன ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் பிரயாணம் செய்த தூரம் மற்றும் எரிபொருள் செலவினம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த முடியாதிருந்தது.

**(v) சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக எரிபொருளை பயன்படுத்துதல்**

---

- 2010 மே 24 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், கௌரவ பிரதி அமைச்சரின் பதவியணியினரிற்கு உரித்தான எரிபொருள் படிகளிற்கு மேலதிகமாக 2017 சனவரி 01 தொடக்கம் 2017 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின் போது ரூபா 326,135 கிரயமான 3,433 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

- 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க பொது செலவின முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ பிரதி அமைச்சரிற்கு உரித்தான எரிபொருள் படியை விஞ்சி 2017 சனவரி 01 தொடக்கம் 2017 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின் போது பிரதி அமைச்சர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களிற்காக ரூபா 1,486,481 கிரயமான 13,949 லீற்றர் எரிபொருள் மற்றும் ரூபா 1,109,033 எரிபொருள் முற்பணம் என்பன வழங்கப்பட்டிருந்தன.

**(இ) நிதி மற்றும் செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழான வாகனப் பயன்பாடு**

அமைச்சினால் நிதிக் குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டிருந்த 458 வாகனங்களிற்காக குத்தகையாக செலுத்தப்பட்ட பணம், எரிபொருள், உராய்வு நீக்கி எண்ணெய், திருத்தங்கள், சேவை செலவினம் மற்றும் வாகன காப்புறுதி தொகை அதேபோல் அவ்வாகனங்கள் ஓடப்பட்டிருந்த கிலோமீற்றர் எண்ணிக்கை தொடர்பான தகவல்களும் செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டிருந்த 02 வாகனங்களிற்கான எரிபொருள் செலவினமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அலுவலக பராமரிப்பு செலவினம்**

அமைச்சின் தலைமை அலுவலக வளாகத்தில் 06 கட்டிடங்கள் காணப்படுகின்றதுடன், வருடாந்தம் ரூபா 124,200,000 வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தில் தலைமை அலுவலகத்தின் பிரிவொன்று பேணப்பட்டு வருகின்றது. வருடாந்த துப்பரவாக்கல் சேவைக் கட்டணம் ரூபா 34,441,763 ஆகக் காணப்பட்டதுடன், பாதுகாப்பு சேவைக் கட்டணம் ரூபா 33,770,472 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் கட்டிடத்தின் மொத்தக் கிரயம் ரூபா 192,412,235 ஆக காணப்பட்டது. அலுவலக இடவசதிகளை முன்னேற்றும் நோக்கில் புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்து அதன் வேலைகள் 2016 ஒக்தோபர் 29 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், முறையான திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக கட்டிடத்தின் அத்திவார வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**(உ) சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை**

தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாணம், பதுளை மற்றும் கண்டி போன்ற வைத்தியசாலைகளில் பேணப்பட்டு வருகின்ற சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 17,441,287 ஆக காணப்பட்டது.

**(ஊ) அரசாங்கச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம் குறைவடைதல்**

அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை ஆகக்கூடியளவு ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல், பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் முன்னேற்றுதல் என்பன மேற்கொள்ளப்படாததன் காரணமாக அச்சொத்துக்களின் பெறுமதிகள் மற்றும் தரம் குறைவடைந்த சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைத்தியசாலையின் பெயர் | பிரிவு / வாட் இலக்கம் | உபகரணத்தின் பெயர் | பெறுமதி | செயற்பாடற்ற காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| மஹமோதர போதனா வைத்தியசாலை | 07 | Ultra sound Scan Machine | 10,000,000 | 2017 யூன் 17 முதல் கணக்காய்வுத் திகதியான 2017 திசெம்பர் 27 வரை |
| மாத்தறை பொது வைத்தியசாலை | ஆய்வுகூடம் | Fully Automated Bio Chemistry Analyzer | கணக்காய்விற்கு சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஒக்தோபர் 20 முதல் கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 10 வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| -மேற்படி- | EEG பிரிவு | EEG Machine (XLTEK) | கணக்காய்விற்கு சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 18 வரை |
| அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலை | பராயமடையாத குழந்தை பிரிவு | Phototherapy Machine | 530,000 | 2018 சனவரி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2018 பெப்ரவரி 16 வரை |
| கராபிட்டிய போதனா வைத்தியசாலை | ஆய்வுகூடம் | Auto clave Machine | கணக்காய்விற்கு சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 சனவரி 17 முதல் 2018 பெப்ரவரி 16 வரை |

**(எ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) 2006 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 31,713,813 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 224 கைவிரல் அடையாள இயந்திரங்கள் 11 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது.

(ii) ரூபா 189,917,401 மொத்த கிரமயான 58 மருத்துவ உபகரணங்கள் மற்றும் உபபாகங்கள் 11 வைத்தியசாலைகளில் 01 ஆண்டிற்கும் 11 ஆண்டுகளிற்கும் இடையிலான காலப்பகுதியிலிருந்து விளைவற்றிருந்தது. மேலும், கிரயத்தை கண்டறிய முடியாத 141 மருத்துவ உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகள் பொலன்னறுவை வைத்தியசாலையில் ஒரு வருடத்திற்கு மேலான காலப்பகுதியிலிருந்து விளைவற்றிருந்ததுடன் அவற்றில் 54 பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கிரயத்தை கண்டறிய முடியாத மோட்டார் வாகனமொன்று 02 ஆண்டுகளிற்கு மேலாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் விளைவற்றிருந்தது.

(iv) ரூபா 3,174,600 கிரயமான பிணம் வைக்கும் குளிரூட்டி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒரு ஆண்டிற்கு மேலாக விளைவற்றிருந்தது.

**(ஏ) வருடாந்த பொருள் மெய்மையாய்வுகளை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு, அதன் கீழுள்ள 97 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 31 வைத்தியசாலைகள் மற்றும்

நிறுவனங்களில் உரிய திகதிகளில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியிருந்ததுடன் 20 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிற்குரிய அவ் அறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 17 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு குறைந்த காலமாக காணப்படுகின்ற அமைச்சினால் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 21,247 மில்லியனாகும்.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 57 செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 3,700 மில்லியன் பொறுப்புக்களிற்கு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினதும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினதும் இரண்டு அமைச்சர்களாலும் 2017 யூன் 23 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை ஆதனங்கள் உட்பட கட்டிடங்களின் பௌதீக உடமை நீண்டகால குத்தகை அடிப்படையில் 10 ஆண்டுகளிற்கு இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான இணக்கப்பாட்டை பெறுவதற்கும் வைத்தியசாலையை ஸ்தாபிப்பதற்காக சைட்டம் நிறுவனம் அரச வங்கிகளிலிருந்து பெற்றிருந்த ரூபா 1,013 மில்லியன் கடன் தொகையை தீர்ப்பனவு செய்யும் வரை அதே ஆதனத்தின் உரிமை மற்றும் சட்டரீதியான தன்மையுடன் சைட்டம் நிறுவனத்தை பேணுவதற்கும், கடன் தொகையை செலுத்தும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் உரிமை மற்றும் அனைத்து ஆதனங்களினதும் பெறுமதியை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கும் முன்மொழியப்பட்டிருந்தது. அவ் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கருத்தில் கொண்டு வைத்தியர் நெவில் பெர்னாண்டோ இலங்கை ரஷ்யா பரஸ்பர வைத்தியசாலையை இலங்கை அரசாங்கத்திற்கு கையளிப்பதற்காக 2017 யூலை 05 இல் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற பின்னர் 2018 ஆகஸ்ட் 20 இலிருந்து ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் வைத்தியசலையின் ஆதனங்கள் உள்ளடங்கலாக கட்டிடங்களின் பௌதீக உடமையை அரசாங்கத்திற்கு கையேற்பதற்கு உபகுத்தகை உடன்படிக்கை ஏற்படுத்தப்படாதிருந்ததுடன் அவ்வாறான உடன்படிக்கை இல்லாமல் 2017 ஆகஸ்ட் 01 தொடக்கம் 2018 மார்ச் 31 வரையான காலப்பகுதியினுள் இவ்வைத்தியசாலையின் மருந்துகளின் செலவினங்கள் தொடர்பாக மீண்டெழும் செலவினங்களை மேவுகை செய்வதற்காக அமைச்சால் ரூபா 309,766,380 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.8 நிதி மோசடி தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) 55 சந்தர்ப்பங்களின் போது 5,800 பேப்பர் சேர்வியட் பக்கற்றுக்கள் மற்றும் 100 AAA பற்றரிகள் கண்டி பொது வைத்தியசாலையின் களஞ்சியப் பொறுப்பாளரால் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் வழங்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுகாதாரம் 500 மாதிரிப் படிவங்களில் மோசடியாக மாற்றம் செய்யப்பட்டு ரூபா 369,315 தொகையான மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) கண்டி பொது வைத்தியசாலையால் மேற்கொள்ளப்பட்ட சம்பள படிநிலை மாற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 06/2006(ii) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள படிநிலை மாற்றத்தை பெறுவதற்கு உரித்தற்ற கண்டி பொது வைத்தியசாலையின் உத்தியோகத்தர் ஒருவரிற்கு 2006 சனவரி 01 தொடக்கம் சம்பள படிநிலைகளிற்கு முரணாக ஐந்து சம்பள ஏற்றங்களை விட உயர்வான படிநிலையொன்றில் சம்பள படிநிலை மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2006 நவம்பர் 11 ஆந் திகதிய 06/2006(ii) ஆம் இலக்க சுற்றறிக்கை தவறாக விளங்கிக்கொள்ளப்பட்டு தவறான முறையில் சம்பள படிநிலை மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதனை சரி செய்வதற்கும் அதன் காரணமாக மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் அத்தொகை முழுவதும் மீண்டும் அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு வழங்கப்பட்ட 2008 யூன் 26 ஆந் திகதிய 6/2006(vi) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகக் காணப்பட்ட போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் பிழையான சம்பள படிநிலை மாற்றத்தினை திருத்தம் செய்வதற்கும் 2006 சனவரி 01 தொடக்கம் 2017 செப்தெம்பர் மாதம் வரை இவ் உத்தியோகத்தர்களிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த அண்ணளவான ரூபா 592,200 தொகை மற்றும் பிழையான சம்பளங்களை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்ட விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளை மீண்டும் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு மூல உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பாக 07 வகையான உணவுகளிற்காக வர்த்தமானி அறிவித்தலின் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளை விட உயர்வான ஒப்பந்ததாரரின் விலைகளிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அமைச்சின் ''சி2'' பெறுகைக் குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக அவ் 07 வகைப் பொருட்களிற்காக 2017 சனவரி 01 தொடக்கம் 2017 திசெம்பர் 20 வரையான காலப்பகுதியின் போது ரூபா 2,147,453 தொகை வழங்குனரிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை விநியோகஸ்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 நட்டங்களும் சேதங்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) பல்வேறு துறைகளின் கீழ் பயிற்சி மற்றும் வேலைகளிற்காக சம்பளத்துடன் கூடிய மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றிருந்த உத்தியோகத்தர்கள் மீண்டும் வேலைக்கு அறிக்கையிட்டிருக்காததன் காரணமாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய பெறுமதி அறவிடப்படாமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பட்டப்பின் படிப்பு கற்கைகளிற்காக வெளிநாட்டிற்கு சென்ற பின்னர் மீண்டும் வேலைக்கு அறிக்கையிட்டிருக்காதமை, வேலைக்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் கட்டாயமான சேவைக்காலப்பகுதி வழங்கப்படாமை மற்றும் தொழிலிற்காக சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையை பெற்ற பின்னர் வேலைக்கு மீண்டும் அறிக்கையிட்டிருக்காதமை போன்ற விடயங்கள் காரணமாக 86 வைத்தியர்களும் உள்ளூர் பயிற்சிகளுக்காக 62 தாதியர்கள் மற்றும் உதவி மருத்துவ சேவை மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் மீறப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்திற்கு பெறப்பட வேண்டியதாக அமைச்சால் இனங்காணப்பட்ட மொத்த தொகை ரூபா 72,571,823 ஆகக் காணப்பட்டது. இத்தொகையினுள் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பதவி வறிதாக்கப்பட்ட 75 வைத்தியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 48,110,604 கூட்டுமொத்த தொகை உள்ளடங்கியிருந்தது.

(ii) உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் மீறப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகை முழுவதும் அறவிடப்பட்டதென கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த 09 வைத்தியர்களிற்கு செலுத்தப்பட்ட மேலதிக சம்பளங்கள், அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டிய பெறுமதியை கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படாததன் காரணமாக ரூபா 3,213,367 தொகை அவர்களிடமிருந்து குறைவாக அறவிடப்பட்டு கோவைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. மேலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் 02 வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 718,870 தொகையான பிணைமுறிகளின் பெறுமதிகள் மேற்படி அறவிடப்பட வேண்டிய தொகையினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 119 தாதிய மாணவர்கள் மற்றும் உதவி மருத்துவ சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என அமைச்சால் இனங்காணப்பட்டிருந்த பிணைமுறிப் பெறுமதி எவ்வளவு என அமைச்சின் சட்டப் பிரிவால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iv) மாத்தறை பொது வைத்தியசாலையில் சம்பளமற்ற விடுமுறையை பெற்றிருந்த 04 வைத்தியர்கள் மற்றும் ஏனைய உதவி மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் உடன்படிக்கை காலப்பகுதி முடிவடைந்திருந்த போதிலும், மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருக்காததால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த பிணைமுறித் தொகை ரூபா 2,889,381 ஆக காணப்பட்டது.

(ஆ) கேகாலை போதனா வைத்தியசாலையின் மின்சாரப் பட்டியல்கள் உரிய திகதியில் செலுத்தப்படாததனால் மீளாய்வாண்டின் போது ரூபா 168,097 வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(இ) கண்டி பொது வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டிச்சாலை 2015 யூன் 16 தொடக்கம் 2016 யூன் 15 வரை ரூபா 990,000 மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 13 தொடக்கம் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்குப் பெற்றவரால் கைவிடப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குரிய குத்தகை தொகை செலவு வைக்கப்படாமல் ஒப்பந்ததாரருக்கு மொத்த முற்பணத் தொகையையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததால் அரசாங்கத்திற்கு ரூபா 1,980,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) குருணாகல பொது வைத்தியசாலையில் 2003 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட ரூபா 837,000 தொகையான 06 வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 13,441,307 கிரயமான 99 வகையான மருந்துகள் காலாவதியாகியிருந்ததுடன் அகற்றப்படாமல் வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) காலாவதியாகுவதற்கு முன்னர் மருந்துகள் தேவைப்படுகின்ற ஏனைய வைத்தியசாலைகளில் வினவப்படாததன் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரதான மருந்துக் களஞ்சியத்தில் 2017 பெப்ரவரி மாதம் வரை ரூபா 7,806,670 கிரயமான 100 இற்கு மேற்பட்ட வகையான மருந்துகள் காலாவதியாகியிருந்தன.

## 2.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சீராக்கம் செய்யப்பட்டிருக்காத பந்திகளிற்கான தொடர்புகள் பின்வருமாறு உள்ளன.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2007 | 6.6(உ)xiii | மருந்துகளை போக்குவரத்துச் செய்வதில் ஏற்பட்ட ரூபா 10 மில்லியன் முறைகேடுகளிற்கு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 15 வரையிலும் நட்டத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 | 3.25 | 1962 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 48 வருட காலப்பகுதியின் போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சேர்க்கபட்ட நோயாளர்களின் கைவசம் காணப்பட்டு அவர்கள் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் பொறுப்பில் எடுக்கப்பட்டிருந்த போதிலும் உரிமை |

| | | | |
|---|---|---|---|
| | | | கோரப்படாத தங்க ஆபரணங்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொருட்கள் முறையான அகற்றல் நடைமுறையின் பின்னர் அரசாங்க வருமானத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 | 3.26 | சுற்றாடல் ரீதியான மற்றும் தொழில்சார் சுகாதார பிரிவினால் நடாத்தப்பட்ட அயடின் பற்றாக்குறையான நோய்களைத் தடுத்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்திற்கு யப்பான் அரசாங்கத்தின் நன்கொடையொன்றாக பெறப்பட்டிருந்த ரூபா 5.95 மில்லியன் பெறுமதியான உப்பினை அயடின் மயமாக்குவதற்காக பயன்படுத்தப்படும் பொட்டாசியம் அயடேட் இருப்பு இலங்கை உப்பு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டு 03 ஆண்டுகளும் 05 மாதங்களிற்கும் மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் உரிய பணம் இலங்கை உப்பு கம்பனியிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 | 3.28.2 | 2003 யூலை 02 ஆம் திகதிய 1295/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானி மற்றும் 2011 நவம்பர் 25 ஆம் திகதிய 1733/52 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானி என்பவற்றிற்கு முரணாக சுகாதார சேவை பணியாளர் நாயகம் உட்பட சில உத்தியோகத்தர்களினால் தமது கடமை அதிகாரத்தை விஞ்சி செயற்பட்டமை தொடர்பாக 2018 ஆகஸ்ட் 15 வரையிலும் எந்தவொரு படிமுறையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.11 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வலிப்புநோய் வைத்தியசாலையின் முதலாவது திட்டம் 2008 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் நிலத்தூண்களை மண்ணிற்குள் இறக்கும் (pilling) ஒப்பந்தம் 2012 செப்தெம்பர் 21 இல் ரூபா 91,373,499 தொகைக்கும் கட்டிட நிர்மாண ஒப்பந்தம் ரூபா 1,793,448,086 தொகைக்கும் 2013 மே 31 இல் வழங்கப்பட்டிருந்தன. முறையான ஆய்வு ஒன்றின் பின்னர் முறையாக திட்டம் தயாரிக்கப்படாததன் காரணமாக நிர்மாணத்தின் போது வடிவமைப்புக்களை மாற்றுவதற்காக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,793,448,086 இலிருந்து ரூபா 1,984,703,981 வரை ரூபா 191,255,895 ஆல் அதிகரிக்கப்பட வேண்டியிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் ஏறத்தாழ 08 ஆண்டுகள் தாமதமடைந்ததிற்கு இது காரணமாக இருந்ததுடன் தாமதம் காரணமாக ரூபா 97,493,277 தொகையான விலை முரண் செலுத்தப்படுவதற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு வைத்தியசாலைக்குச் சொந்தமான சொத்தொன்றை குத்தகைக்கு வழங்குவதற்கு அதிகாரம் காணப்படாத போதிலும் கண்டி பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை 2016 யூன் 28 தொடக்கம் 2016 யூலை 27 வரை பெறுகை நடைமுறையை தவிர்த்து பொது வைத்தியசாலையின் சிற்றூழியர் நலன்புரிச் சங்கத்தால் மாதமொன்றிற்கு ரூபா 60,000 இற்கு வெளிநபரொருவரிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) வரையறுக்கப்பட்ட கூட்டுறவு சிற்றுண்டிச்சாலை சங்கமொன்றிற்கு வைத்தியசாலைக்குச் சொந்தமான சொத்தொன்றை குத்தகைக்கு வழங்குவதற்கு அதிகாரம் காணப்படாத போதிலும் குருணாகல் மாகாணப் பொது வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டிச்சாலை பெறுகை நடைமுறையை தவிர்த்து மாதமொன்றிற்கு ரூபா 689,310 தொகை அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி பொது வைத்தியசாலையில் நடாத்தப்பட்டு வருகின்ற நடமாடும் விற்பனை வாகனத்திலிருந்து உணவை விற்பனை செய்வதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் செலுத்தப்பட வேண்டிய வரியின் நிர்ணயிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்காததால் வரிக் கட்டணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கான சாத்தியத்தன்மையும் காணப்படவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட கேகாலை போதனா வைத்தியசாலையிலுள்ள இருதய நோய் பிரிவின் கட்டிடத்தில் இடவசதி காணப்படாததன் காரணமாக பரிசோதனைக்காக வருகின்ற நோயாளர்கள் அவர்களது முறை வரும் வரை தங்கியிருப்பதற்கு இடவசதி காணப்படாததுடன் அத்தகைய இடமொன்றை வழங்குவதற்கு வேண்கோளொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஈசீஜீ இயந்திரத்தின் தேவைப்பாடு 2014 ஏப்ரல் 07 இல் அமைச்சிடமிருந்து கோரப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 23 வரையிலும் அவ்வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரூடாக மீளாய்வாண்டின் போது தொற்றாத நோய் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முச்சக்கர வண்டிகள் மற்றும் வான்களின் சாரதிகளிற்கான அடிப்படை முதலுதவி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக இரத்தினபுரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு அமைச்சால் ரூபா 762,660 தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 07 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருக்காததுடன் ரூபா 211,850 தொகை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

(எ) அனுராதபுர போதனா வைத்தியசாலையின் பிரதான ஆய்வுகூடத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்து 05 உப ஆய்வுகூடங்களிற்கு வழங்கப்பட்ட இரசாயனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகைகள் மற்றும் வழங்கல்களை பதிவு செய்வதற்காக உப ஆய்வுகூடங்களால் இருப்பிற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 05 உப ஆய்வுகூடங்களிற்கு பெறப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் மிகுதியாகவுள்ள இரசாயனங்கள் மற்றும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஏ) திருகோணமலை பொது வைத்தியசாலையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த இரத்த சுத்திகரிப்பு பிரிவிற்காக (Dialysis Unit) NEPH10LOGIST வைத்திய நிபுணர், பயிற்றப்பட்ட தாதிய பதவியணியினர் மற்றும் சிற்றூழியர்கள் ஆகியோரை கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 05 வரையிலும்

வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக தாதிய உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மாத்திரம் இப்பிரிவின் இயந்திரங்களிலிருந்து சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ் இரத்த சுத்திகரிப்பு பிரிவிற்காக 2016 ஒக்தோபர் 02 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,782,650 கிரயமான RO தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் 2018 பெப்ரவரி 28 வரையிலும் செயற்படுத்தப்படாததன் காரணமாக 06 DIALYSIS இயந்திரங்கள் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஐ) பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் 2016/2017 ஆம் ஆண்டின் சலவை சேவையை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்த உடன்படிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உரிய காலத்தினுள் வைத்தியசாலையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட அனைத்து துணிகளும் கழுவி, தூய்மையாக்கப்பட்டு, இஸ்திரி போடப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் ஒழுங்கான இடைவெளிகளில் துணிகள் கொண்டு செல்லப்படுவதில்லை, முறையாக சலவை செய்து கழுவுவதில்லை மற்றும் கொண்டு செல்லப்பட்ட துணிகளின் எண்ணிக்கையை விட குறைவாக திருப்பி கொடுக்கப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரிற்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அது தொடர்பாக உடன்படிக்கையை மீறாது இருக்குமாறு காலத்திற்குக் காலம் எழுத்து மூலம் ஒப்பந்ததாரரிற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும் ஒப்பந்ததாரரின் முன்னைய வேலை நிலைமையை தேடிப்பார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2017 பெப்ரவரி 01 தொடக்கம் 2018 சனவரி 31 வரையான காலப்பகுதிக்கு அதே ஒப்பந்ததாரரிற்கு மீண்டும் ரூபா 15,759,600 தொகைக்கு சலவை சேவையை அமைச்சின் பெறுகைக் குழு வழங்கியிருந்தது.

(ஒ) மாத்தறை பொது வைத்தியசாலையின் நாளாந்த கடமைகள் வைத்தியசாலையில் வேலை செய்யும் சிற்றூழியர்கள் சம்பளமற்ற விடுமுறைகளை பல தடவைகள் எடுத்ததன் காரணமாக தடைப்பட்டிருந்த போதிலும் அவர்களிற்கு எதிராக போதியளவு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கும் இந்தியாவின் GVK-EMRI Lanka (Pvt) Limited நிறுவனத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ''சுவசெரிய'' எனும் பெயருடைய முன் நோயாளர் பாதுகாப்பிற்கான அவசர அம்புலன்ஸ் சேவையின் முதலாவது கட்டம் 2016 யூலை மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2017 யூலை மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதே காலப்பகுதியின் போது மேல் மற்றும் தென் மாகாணங்களில் 88 அம்புலன்ஸ்களை பயன்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தால் டொலர் 7.6 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 01 இலிருந்து இலங்கை அரசாங்கத்தின் நிதியேற்பாடுகளின் கீழ் இச்செயற்திட்டத்தை மேலும் அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 275,000,000 தொகையான நிதியேற்பாடு செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இச்சேவையை செயற்படுத்துவதற்கு பிரயோகிக்கக்கூடிய சட்டங்களையும் விதிகளையும் உள்ளடக்குவதன் மூலம் இந்தியாவின் GVK-EMRI Lanka (Pvt) Limited உடன் அமைச்சு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தியிருக்கவில்லை.

(ii) 2017 ஆகஸ்ட் 01 தொக்கம் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது 04 சந்தர்ப்பங்களில் நிறுவனத்திற்கு ரூபா 159,882,409 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆகஸ்ட் 01 தொடக்கம் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட ரூபா 134,569,464 தொகையை தீர்ப்பனவு செய்வதற்காக 04 சந்தர்ப்பங்களில் அமைச்சால் வழங்கப்பட்டிருந்த முற்பண தீர்ப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்குப் பிரிவால் திருப்பியனுப்பப்பட்டிருந்ததுடன் அச்செலவினத்தில் விதிகளுடன் இணங்காத செலவினம் உள்ளடக்கப்பட்டிருந்ததென அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் அவதானிக்கப்பட்டிருந்தது.

## 2.12 பொதுமக்களிற்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகவல்களை அறிந்துகொள்ளும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பொது மக்களால் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல் கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை 142 ஆக இருந்ததுடன் அதில் 37 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. 74 விண்ணப்பங்களிற்கு அமைச்சு பதிலளித்திருக்காததுடன் வழங்கப்பட்ட 31 பதிலளிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 02 விண்ணப்பங்களிற்கான தகவல்களை வழங்குவதற்கு 10 மாதங்கள் கடந்திருந்தன. 74 பதிலளிக்கப்படாத விண்ணப்பங்களில் 24 கோரிக்கைகள் 2018 யூலை 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு மேலாக தாமதமாகியிருந்ததுடன் 50 விண்ணப்பங்கள் மீதான கோரிக்கைகள் மேற்படி திகதி வரை 06 மாத கால எல்லையை விஞ்சி தாமதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கழிவுகளை அகற்றுதல் சுற்றாடலிற்கு இணங்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தை சுற்றி அமைந்துள்ள வைத்திய மற்றும் தாதிய விடுதிகள் காசநோய் வாட், சமையலறை, இரத்த சுத்திகரிப்பு பிரிவு, உடற்பயிற்சி சிகிச்சை (Physical Therapy), மருந்தகம் மற்றும் பழைய கட்டிடங்களிற்கு அருகிலுள்ள ஏனைய கட்டிடங்களின் கழிவுநீர் உள்ளடங்கலாக அகற்றப்படும் அனைத்து கழிவுகளும் நீண்டகாலமாக கழிவு நீர் முறைமை ஒன்றுடன் துப்பரவாக்கப்படாமல் நேரடியாக சமுத்திரத்திற்கு கலப்பதற்கு அனுதிக்கப்பட்டிருந்தது.

(ii) குருணாகல் பொது வைத்தியசாலை தாதியர் பயிற்சி கல்லூரிகளில் 12 ஆண்டுகளிற்கு மேலாக கழிவுநீரகற்றல் முறைமை முறையாக செயற்படாததன் காரணமாக மலசலகூட கழிவுகள் மற்றும் வைத்தியசாலை வளாகங்களிலிருந்து விடுவிக்கப்படும் அசுத்த நீரை அகற்றுதல் அருகிலுள்ள கால்வாய்க்குள் விடப்பட்டிருந்தது. இக் கால்வாயின் பாதையிலுள்ள துணைக் கால்வாய் அந்நீரை மகுறு ஓயாவிற்கு கொண்டுவந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) குருணாகல் பொது வைத்தியசாலை வளாகத்தில் உயர் வலுவுடைய பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கை பயன்படுத்துவதை குறைப்பதற்காக அல்லது

தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சிறிஞ்சஸ் (Syringes) மற்றும் ஊசிகள் உள்ளடங்கலான சிக்சிசை கழவுகள் மற்றும் பிரசவ அறை கழிவுகள் வைத்தியசாலையின் எரியூட்டி (Incinerator) மூலம் எரிக்கப்படுகின்ற போதிலும், அவை முழுமையாக எரிக்கப்படுதில்லை. எரியூட்டியின் புகை போக்கி ஏறத்தாழ 60 அடி உயரத்தில் இருப்பதன் காரணமாக கறுப்பு புகை தாழ்வான வளிமண்டலத்திற்கு வெளியிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**2.13 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 76,450.00 | 75,559.32 | 890.68 | 1.17 |
| | மூலதனம் | 18,522.26 | 17,435.27 | 1,086.99 | 5.87 |
| | **மொத்தம்** | **94,972.26** | **92,994.59** | **1,977.67** | **2.08** |
| 2014 | மீண்டுவருபவை | 91,000.00 | 90,493.90 | 506.10 | 0.56 |
| | மூலதனம் | 26,162.00 | 21,627.62 | 4,534.38 | 17.33 |
| | **மொத்தம்** | **117,162.00** | **112,121.52** | **5,040.48** | **4.30** |
| 2015 | மீண்டுவருபவை | 109,446.25 | 100,754.15 | 8,692.10 | 7.94 |
| | மூலதனம் | 38,718.18 | 29,487.54 | 9,230.64 | 23.84 |
| | **மொத்தம்** | **148,164.43** | **130,241.69** | **17,922.75** | **12.10** |
| 2016 | மீண்டுவருபவை | 137,067.50 | 111,752.06 | 25,315.44 | 18.47 |
| | மூலதனம் | 39,991.70 | 23,027.68 | 16,964.02 | 42.42 |
| | **மொத்தம்** | **177,059.20** | **134,779.74** | **42,279.46** | **23.88** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டுவருபவை | 124,626.97 | 116,795.79 | 7,831.18 | 6.28 |
| | மூலதனம் | 45,594.00 | 27,499.73 | 18,094.27 | 39.69 |
| | **மொத்தம்** | **170,220.97** | **144,295.52** | **25,925.45** | **15.23** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல்**

அமைச்சிற்குரிய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காததால் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்மொழியப்பட்ட கால எல்லையை கருத்தில் கொள்ளாமல் நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததால் அமைச்சினால் 73 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மொத்தக் கிரய மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான மொத்த நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை சாத்தியவள ஆய்வுகள் மற்றும் பெறுகை செயன்முறைக்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் மொத்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்ததால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 6,537 மில்லியன் தொகை அல்லது 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையே நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

42 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,191 மில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை**

75 செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 8,879 மில்லியன் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் மொத்தம் ரூபா 2,248 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்புக்களானது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 50 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையிலான வீச்சளவில் காணப்பட்டது.

**(iii) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ தரமான மற்றும் வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக அத்தியாவசிய மற்றும் மிகவும் அவசரமான மூலதன செலவினங்களாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம்

மேற்கொள்ளப்பட்டிருந்த 06 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 01 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,459,000,000 தொகையான நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

- இதற்கு மேலதிகமாக 12 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 03 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,960,000,000 தொகையான மேலதிக நிதியேற்பாடுகளில் ரூபா 3,237,413,087 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்புக்களின் சதவீதம் அச் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் 18 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது.

## 2.14 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 11101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1600 | 1,491 | 1,070 | 1,082 | 2,500 | 2,194 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) எல்லைகள் பின்பற்றப்படாமை

#### ஆகக் குறைந்த பெறுவனவுகள் எல்லை அடைந்துகொள்ளப்படாமை

அமைச்சினால் 11101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்குரிய ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,200 மில்லியனாக பாராளுமன்றம் அங்கீகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை சேகரிக்கப்பட்ட பெறுவனவுகளின் தொகை ரூபா 1,082 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 118 மில்லியன் பெறுவனவு எல்லை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 27 இல் முற்பண ‘‘பீ’’ கணக்கின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையை ரூபா 1,070 ஆக மாற்றம் செய்வதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் ஊடாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் 2018 யூன் 14 இல் உரிய திருத்தத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. முறையான கால எல்லைகளிற்குள் மாற்றங்கள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக 2018 மார்ச் 16 இல் சமர்ப்பிக்கப்பட்ட திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்களில் இத் திருத்தம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 56,133,525 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடையே ரூபா 17,726,126 ஆகவும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்டவை ரூபா 21,036,883 ஆகவும் இருந்து வந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

**(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் அறவிடப்படாமை**

இவ் அமைச்சின் சேவையிலிருந்து வேறு இடங்களிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 80 மில்லியன் கடன் மீதிகள் உரிய நிறுவனங்களில் 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்த கணக்குப் பொழிப்பின் ஊடாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது ரூபா 62 மில்லியன் கடன் மீதிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.15 கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் கீழான 02 கட்டுநிதிக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 342 மில்லியன் ஆகும். அமைச்சினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2018 ஏப்ரல் 30 வரை ரூபா 242 மில்லியன் கட்டுநிதி மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 362,702 மீதி 1997 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த கட்டுநிதிகள், மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிகள் மற்றும் பெறப்பட்ட கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பித்த கட்டுநிதிக்கு இடையிலான வேறுபாடு | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதி என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 11,552.53 | 13,035.35 | 12,384.10 | 1,482.82 | 651.25 |
| பெப்ரவரி | 11,352.53 | 13,372.79 | 11,272.11 | 2,020.26 | 2,100.68 |
| மார்ச் | 11,377.53 | 14,419.85 | 10,799.30 | 3,042.32 | 3,620.55 |
| ஏப்ரல் | 12,802.53 | 15,408.56 | 10,555.82 | 2,606.03 | 4,852.74 |
| மே | 12,352.53 | 15,523.56 | 11,444.70 | 3,171.03 | 4,078.86 |
| யூன் | 12,877.53 | 15,136.90 | 9,878.44 | 2,259.37 | 5,258.46 |
| யூலை | 13,600.95 | 15,699.90 | 10,790.00 | 2,098.95 | 4,909.90 |
| ஆகஸ்ட் | 13,625.95 | 17,284.20 | 11,199.50 | 3,658.25 | 6,084.70 |
| செப்தெம்பர் | 13,625.95 | 21,922.90 | 8,580.72 | 8,296.95 | 13,342.18 |
| ஒக்தோபர் | 13,600.95 | 16,938.18 | 9,620.04 | 3,337.23 | 7,318.14 |
| நவம்பர் | 13,624.95 | 16,908.18 | 12,666.00 | 3,283.23 | 4,242.18 |
| திசெம்பர் | 13,800.95 | 21,922.90 | 13,657.20 | 8,121.95 | 8,265.70 |
| **மொத்தம்** | **154,194.88** | **197,573.27** | **132,847.93** | **43,378.39** | **64,725.34** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம், செயற்பாடு பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீரப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும் 797 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 24,958,967 கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் செயற்பாடு பூர்த்தியடைந்து 01 மாதம் முதல் 16 மாதங்கள் வரையிலான காலம் தாமதித்த பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. 120 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 6,300,512 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் 2018 மே 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 26 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 656,170 கூட்டுமொத்தத் தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் 01 நாள் தொடக்கம் 95 நாட்கள் வரையான காலப்பகுதியினுள் நிறுத்திவைக்கப்பட்ட பின்னர் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தன.

(iii) 35 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,551,106 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகளில் வேலை பூர்த்தியடைந்த பின்னர் ரூபா 525,691 தொகையான சேமிப்புக்கள் 10 நாட்கள் தொடக்கம் 195 நாட்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2017 நவம்பர் 02 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப் புத்தகத்தை முடிவுறுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் செயலாளரால் அமைச்சின் தலைமை அலுவலகத்தின் கணக்குகளை தீர்ப்பதற்குப் பெறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தக மீதி தொடர்பான குறிப்புக்கள் வங்கிக்கு சமர்ப்பக்கப்பட்டு வங்கியூடாக வரவுக் குறிப்பு பெறப்பட்டு அது 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ் காணப்படும் 07 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,228 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 19,932,797 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கண்டி போதனா வைத்தியசாலையில் விசேட புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்திடமிருந்து ரூபா 40 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 30 தொடக்கம் 2015 திசெம்பர் 31 வரை காணியின் ஆரம்பக் கட்ட வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 27,611,505 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 12,388,495 மிகுதி தொகை மற்றும் நிர்மாணங்களிற்காக மூன்று நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 478,564 தொகை உள்ளடங்கலாக ரூபா 12,867,059 கூட்டுமொத்தத் தொகை உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

## 2.17 வங்கிக் கணக்குகளின் செயற்படுத்துகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### சரிப்படுத்தப்படவேண்டிய மீதிகள்

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 74 வங்கிக் கணக்குகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றுக்களினை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 27 வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 1.8 மில்லியன் கூட்டுத்தொகையான விநியோகிக்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத 127 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் 02 வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 38.07 மில்லியன் தொகையுடைய 04 நேரடி செலுத்துகைகள் மற்றும் ரூபா 0.27 மில்லியன் தொகையான 06 வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய நேரடி உழைப்புக்களினை இனங்கண்டு கணக்குகளுக்கு எடுப்பதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.18 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சு பின்வரும் பதிவேடுகளினைப் பேணியிருக்காத அதேவேளை ஏனைய சில பதிவேடுகள் முறையாக மாற்றும் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | நிதிப்பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க பொதுத் திறைசேரியின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) அதன்பின்னரான 11 ஆம் பிற்சேர்க்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒப்புதலுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படல் வேண்டும். | நாளதுவரையாக்கப்பட்ட முறையொன்றில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சேதமடைந்தவைகளின் பதிவேடு | சேதமடைந்தவைகளின் பதிவேடொன்று நிதிப்பிரமாணம் 110 இன் வடிவத்தின் பிரகாரம் பேணப்படல் வேண்டும். | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வானகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.19 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை** | | |
| (i) XII ஆம் பந்தியின் 18.4.3 ஆம் பிரிவு | - | செலுத்துகையற்ற பிரசவ விடுமுறையின் அங்கீகரிப்புக்கு முன்னர் கடனொன்றையோ அல்லது முற்பணமொன்றையோ தொடர்ச்சியாக மாதாந்த தவணைகளின் அடிப்படையில் அறவிடுகைக்கு பொருத்தமான அளவிடைகளினைப் பிரயோகிப்பதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய போதிலும், செலுத்துகையற்ற பிரசவ விடுமுறையினை எடுத்த அமைச்சின் பெண் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவ்வாறான செயல்முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்** | | |
| (i) நிதிப்பிரமாணம் 136 | 28,210,142 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம், பாதீட்டு ஒதுக்கீடுகளுக்குள் காணப்படும் தொடர்புபட்ட விநியோகத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பொறுப்புடையவராகக் காணப்பட்ட போதிலும்கூட உபகரணங்களுக்கு கட்டளையிடுவதற்கு அளவிடைகள் எடுக்கப்பட வேண்டுமென்ற உண்மை காரணமாக கேகாலை போதனா வைத்தியசாலைக்கு ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுக் காணப்படாதிருந்தமையால் அவற்றின் மீது அமைச்சு நிதிகளினை வழங்கியிருக்காமையினால் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு உபகரணங்களுக்கு செலுத்துகைகள் மேற்கொள்ள முடியாது காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 210(1) | 761,306 | எப்பொழுதாவது தள்ளுபடிகள் காணப்படுகையில், தள்ளுபடிகளினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முற்பணமாக செலுத்துகைகளினை மேற்கொள்வது முக்கியமாகக் காணப்படுகின்றது. அதன் காரணமாக பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை மீளாய்வாண்டில் உரிய திகதிகளில் 05 நீர்மானி வாசிப்புக்களுக்கு பட்டியல்களினை செலுத்துவதற்கு தவறியிருந்ததுடன், ரூபா 154,621 தொகையான அறவிடுவதற்கு இயலுமாகக் காணப்பட்டிருந்த தள்ளுபடி இழக்கப்பட்டிருந்தது. மேலும், 06 நீர்மானி வாசிப்புக்கள் ரூபா 606,685 தொகை உள்ளடங்கலாக சேவைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான சேவைக் கட்டணங்களினை செலுத்துவதற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 1,830,557 | இரத்தினபுரி மாகாண பொது வைத்தியசாலையிலுள்ள ரூபா 1,830,557 ஆன காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | **பொது நிர்வாக அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள்** | | |
| (i) | 1999 ஒக்தோபர் 08 இன் 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1:3 ஆம் பிரிவு | - | 60 வருடங்களினை விட அதிகமான வயதினையுடைய உத்தியோகத்தரொருவர் திறைசேரியின் அங்கீகாரமின்றி வெளிநாட்டு நிதிகள் இணைப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரின் போக்குவரத்திற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 02 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2001 ஆகஸ்ட் 07 இன் 15/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | - | சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சு அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவகங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்களினைப் பயன்படுத்தியிருக்கவில்லை. அதிகமான வைத்தியசாலைகளில் ஆளணியினர்க்கு பொதுவானதொரு கையொப்பமிடல் பதிவேடொன்றினைப் பேணுவதற்குப் பதிலாக வேறுபட்ட பதவிகளுக்கு 35 கையொப்பமிடல் பதிவேடுகள் காணப்பட்டதிலிருந்து, உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை மீது |

| | | | |
|---|---|---|---|
| | | | போதுமானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியாதிருந்தது. |

(ஈ) **ஏனைய சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட 1995 இன் திசெம்பர் 02 இன் 1887 ஆம் இலக்க பொதுவான சுற்றறிக்கை மற்றும் 2004 யூலை 30 ஆந் திகதிய CA/AQ/1 ஆம் இலக்க கடிதம் | - | வைத்தியசாலையின் உணவு விடுதி வரிகள் அரச நிறுவனத்திற்கு செலவு வைக்கப்படவேண்டிய போதிலும், கண்டி பொது வைத்தியசாலை தாதியர் பாடசாலையின் உணவு விடுதி வரிகள் மற்றும் மற்றும் நகர்த்தக்கூடிய உணவு விற்பனைகள் வாகன வரிகள் வைத்தியசாலை உத்தியோகத்தர் நலன்புரி சமூகம் மற்றம் புத்த சமூகத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2015 மே 28 ஆந் திகதிய 01-21/2015 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | - | குருநாகல் மாகாண பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பதிலீடாக ஏதேனும் பரிந்துறையின்றி கருத்திற்கொள்ள முடியாதிருந்த ஒப்பந்ததாரரிடமிருந்து உணவு வகைகளினை கையேற்றிருந்தார். சுற்றறிக்கையின் பிரகாரம், சாதாரண நோயாளியொருவருக்கு 60 கிராம் எடையும், குழந்தை நோயாளியொருவருக்கு 30 கிராம் மற்றும் 45 கிராமிற்கு இடைப்பட்டதுடன், நீரிழிவு நோயாளியொருவருக்கு 30 கிராமும் கனிஷ்ட ஊழியரொருவருக்கு 90 கிராம்களுமாக மீன் துண்டொன்றின் எடை காணப்படவேண்டிய போதிலும், நடாத்தப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம் மீன் துண்டொன்றின் எடை 10 கிராம்கள் மற்றும் 20 கிராம்களுக்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது. |

(உ) **அரச பெறுகை வழிகாட்டல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 1.2.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டல் | 3,123,213 | பெறுகையில் பங்குபற்றுவதற்கு தகுதியான அக்கறையுடைய தரப்பினர்களுக்கு நியாயமான, சமமான மற்றும் அதிஉத்தம சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய போதிலும், கண்டி பொது வைத்தியசாலை மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா விசேட சிறுவர்கள் வைத்தியசாலை என்பன மடிக்கக்கூடிய மெத்தைகள், குப்பை பைகள், டயர்கள் மற்றும் எழுதுகருவிகள் போன்ற பல்வேறு வகைகளினை அரச வியாபார (பொது) கூட்டுத்தாபனத்திடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்திருந்தமை காரணமாக, அதன் விளைவொன்றாக உயர் தரம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அதிஉத்தம பொருளாதார பலன்களுக்கான தாழ்ந்த கிரயம் என்பன தவிர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2.8.1(ஆ) வழிகாட்டல் | | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பொருள் விடயங்கள் மீது நிபுணரொருவரைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வளிப்பதனாக்கி உபகரணத்தினை கொள்வனவு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் போதுமான தொழில்நுட்ப அறிவு மற்றும் தகைமைகளைக் கொண்டிருந்ததுடன் விலைமனுக்கான அழைப்பில் அனைத்து 07 விநியோகஸ்தர்களும் அம்பாறை மாவட்டத்தில் காணப்பட்டமையின் காரணத்தினால் நடுநிலையான மற்றும் நியாயமான முறையில் நிகழ்த்தப்பட்டிருக்காததுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தகர்களிடமிருந்தும் எவ்வித விலைமனுக்களும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 3.5.1(ஈ) வழிகாட்டல் | 2,953,013 | நேரடி கொள்வனவு முறைமையினைப் பின்பற்றுவதற்கு தேவையான அடிப்படை விதிகள் பின்பற்றப்பட்டிருக்காத போதிலும், சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர்கள் வைத்தியசாலையின் குப்பை பைகளுக்கான கிரயம் ரூபா 1,136,500, பொதுமக்களுக்கான எழுதுகருவிகள் மற்றும் சுத்தம் செய்யும் மூலப்பொருட்களின் கிரயம் ரூபா 1,816,513 தொகையும் நேரடிக்கொள்வனவு முறையில் மேற்கொள்ளப்பட்டது. |
| (iv) | 5.4.11 மற்றும் 6.4.12 ஆம் வழிகாட்டல்கள் மற்றும் 2002 யூலை 30 ஆந் திகதிய 364/3 ஆம் இலக்க பொது காசு சுற்றறிக்கை | 11,342,612 | வேலை, பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுமதி சேரி வரியின் ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் விபரங்கள் 15 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் 31 வரையான 05 வருடங்கள் காலப்பகுதியின் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அறிவித்திருக்கவில்லை. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு பெறுமதி சேர் வரியிற்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் |

விநியோகஸ்தர்களுக்கு ரூபா 11,342,612 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**2.20 மருந்துகள், சத்திரசிகிச்சை உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம், மருத்துவ விநியோக பிரிவினால் இருப்புக்களின் களஞ்சியம், பராமரிப்பு போன்ற மருத்துவ விநியோகங்களின் கொள்வனவின் மீதான அவதானிப்புக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்துகள் கோட்பாட்டு மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகள் இன்றி எவ்வித மருத்துவ விநியோகங்களும் கொள்வனவு செய்யப்படக்கூடாதென அமைச்சரவை தீர்மானித்திருந்தபோதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியாகக் காணப்பட்ட 19,844 மருத்துவ விநியோக வகைகளில், 3,086 வகைகள் மருந்துகள் மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளின்றி பயன்படுத்தப்பட்டன.

(ஆ) மருத்துவ விநியோகங்களின் 16,638 வகைகள் 2016 ஆம் ஆண்டளவில் முரணாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 அளவில் அது 19,844 வகைகளுக்கு அதிகரித்திருந்தது. உலகிலுள்ள பல நாடுகளினால் நுகரப்பட்ட மருத்துவ விநியோகங்களின் எண்ணிக்கை மிகவும் தாழ்ந்ததாகக் காணப்படுகின்றபோதிலும், இது வருடாந்தம் நாட்டில் அதிகரிக்கின்றதுடன் அதன் விளைவொன்றாக அந்த மருத்துவ விநியோகங்களின் முகாமைத்துவம் சிக்கலான நிலைமையொன்றாக மாறியது. மருத்துவ விநியோக பிரிவில் சுதந்திரமான விபரக்குறிப்பு கட்டுப்பாட்டு அலகொன்றினை ஸ்தாபிக்காமை, கற்கைகளினை நடாத்துவதன் மூலம் அதிக நுகரத்தக்க வகைகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை, பட்டியலிடப்பட்ட நேரத்தின் பிரகாரம் மருந்துகள் கோட்பாட்டு மீளாய்வுக் குழுவினை சந்திக்காமை, பெறுகை வகைகளினை கண்டறிவதற்கு சமயத்திற்கேற்ப விபரக்குறிப்புக்களினை அபிவிருத்தி செய்யாமை, வகையொன்றின் விபரக்குறிப்பின் சிறிய மாற்றங்களினை மேற்கொள்வதன் மூலம் விசேட வகையொன்றாக அறிமுகப்படுத்தும் பட்டியலில் உள்ளடங்கியுள்ள வகைகள், நிலையான செயல்முன்னேற்ற விபரக்குறிப்பொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை, போன்ற விடயங்கள் இதற்கு தாக்கமளித்திருந்தன.

(இ) மருத்துவ விநியோக பிரிவின் மூலம் மதிப்பிடப்பட்ட வகைகளின் கொள்வனவுக்கு 11 மாத கால விநியோக காலப்பகுதியொன்றுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளினை விநியோகிப்பது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாகக் காணப்பட்டிருந்த போதிலும், தாமதமின்றி மருத்துவ விநியோகங்களினை வழங்குவதற்கு அது தவறியிருந்தது. மீளாய்வாண்டு தொடர்பில் மருந்துவ விநியோகங்களுக்கு கட்டளையிடப்பட்ட வகைகளின் மொத்த எண்ணிக்கை 6,154 ஆகக் காணப்பட்டதுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அதில் 3,527 வகைகளினை அல்லது 57 சதவீதத்தினை வழங்கியிருக்கவில்லை. இந்த தாமதம் காரணமாக, மருத்துவ விநியோகங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிஉயர் கிரயத்துடன் உள்ளூர் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது உள்ளூர் சந்தையிலிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ விநியோகங்களின் மொத்தக் கிரயம் ரூபா 4,224 மில்லியனாகக் காணப்பட்டது. உள்ளூர் சந்தையிலிருந்து மருத்துவ விநியோகங்களின் கொள்வனவு காரணமாக 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 191.7 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2007 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட மொத்த மேலதிக கிரயம் ரூபா 5,358 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஈ) சுவாச நோய்களுடனான நோயாளிகளுக்குத் தேவையான Fluticasone Propionate 250 mcg with Salmeterol உடன் தொடர்புடைய பிரதான கட்டளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டில் உரிய நேரத்தில் பெறப்பட்டிருக்காமை

காரணமாக அந்த மருந்து உள்ளூரிலிருந்து கொள்வனவுசெய்யப்பட்டுக் காணப்பட்டதிலிருந்து, ரூபா 9 மில்லியன் மேலதிக கிரயம் செலுத்தவேண்டிக் காணப்பட்டது.

(உ) சில மருந்துகளின் உள்ளூர் சந்தை விலைகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் விலையினை விட வழமைக்கு மாற்றமாக அதிகரித்திருந்தது.

(ஊ) மருத்துவ விநியோக பிரிவினால் போதுமானதொரு விநியோகக் காலப்பகுதியொன்றுடன் கட்டளைகளினை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்த போதிலும், அமைச்சின் பெறுகை செயன்முறையில் தாமதம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தாமதம் அல்லது விநியோகஸ்தர்களின் தாமதங்கள் மருந்துகள் விநியோகத்தில் தாமதங்களினை ஏற்படுத்தியிருந்த போதிலும், எந்த தரப்பினரிடமிருந்து தாமதங்கள் ஏற்படுகின்றதென இனங்காண்பதற்கு பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 5,358 மில்லியன் மேலதிக கிரயமொன்றை அறவிடுவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

(எ) மருத்துவ விநியோக பிரிவினால் 2017 ஒக்தோபர் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து உள்ளூர் கொள்வனவுகளும், பிரதான கட்டளையில் தாமதங்கள் காரணமாக, ஏற்பட்ட மருந்துகளின் பற்றாக்குறையினை தவிர்ப்பதற்கு 2017 நவம்பர் 01 இலிருந்து அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், நிபந்தைகளினை உள்ளடக்குவதன் மூலம் உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மருத்துவ விநியோக பிரிவிற்கு அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவ விநியோகங்களின் தரத்தினை பரீட்சிப்பதற்கு மாதிரி பரீட்சிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் போதுமான ஆய்வு கூட வசதிகள் அல்லது ஆளணியினர் கூட காணப்பட்டிருக்கவில்லை. வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருத்துவ விநியோகங்கள் தொடர்பில் தரப் பரீட்சிப்பொன்று நடாத்தப்பட்டிருக்காது, அதனைத் தொடர்ந்து ஏதேனும் பிரச்சினைகள் அறிக்கையிடப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தரப் பரீட்சிப்பு ஆய்வுகூடங்களுக்கு அவை அனுப்பப்பட்டிருந்தது.

(ஐ) பெறப்பட்ட மருத்துவ விநியோகங்களினை நோயாளிகளுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் முன்மாதிரிப் பரீட்சிப்பொன்றை நடாத்துவதிலுள்ள பற்றாக்குறை காரணமாக, மருத்துவ மாதிரிகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையொன்று அதற்கு முன்னர் இனங்காண முடியாதிருந்தபோதிலும், பின்னர் தோல்வியடைந்தவைகளாக இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மாத்திரம் தரப் பரீட்சிப்புக்களுக்கு தவறிய மருந்துகளின் கிரயம் ரூபா 613 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஒ) தேசிய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தினால் மருந்துகள் தொடர்பில் விநியோகிக்கப்பட்ட தரப் பரீட்சிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் வைத்தியசாலைக்கு மருத்துவ விநியோகப் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் செய்யப்பட்டிருந்த தரப் பரீட்சிப்புக்களில் தவறியிருந்த மருத்துவ விநியோகங்களின் பயன்பாட்டிலிருந்து இடைநீக்க அல்லது அகற்ற மற்றும் அதன் மூலம் தரக்குறைவான தாழ் தரத்தினையுடைய மருந்துகளினை கையளிப்பதனை இடைநிறுத்த எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தின் இயலளவு போதாமை, பரீட்சிப்பு செயற்பாடுகளுக்கு நீண்ட காலமொன்று எடுத்தமை, கொள்வனவுசெய்யப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமை காரணமாக பரீட்சிக்கப்படவேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை உயர்ந்தளவில் காணப்பட்டதுடன், மருத்துவ உற்பத்திகளின் தரப்பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்ட

தவறுகள் தொடர்பில் சுற்றறிக்கைகளினை விநியோகிப்பதில் தாமதங்கள், மருந்துகள் தரப்பரீட்சிப்பில் தோல்வியடையுமென கண்டறியப்பட்டபொழுது, நோயாளர்களுக்கு குறிப்பிடத்தக்க சதவீதம் விநியோகிக்கப்பட்டிருத்தல் போன்றவற்றின் காரணமாக தொடர்புடைய நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டில் தரப் பரீட்சிப்பில் தவறியிருந்தமை காரணமாக திரும்பப்பெற்ற (withdraw) மருத்துவ விநியோக 55 வகைகளின் மொத்தச் செலவினம் ரூபா 568 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றில் நுண்ணுயிர் கொல்லிகள், (Antibiotics) இருதய நோக்கங்களுக்கு வழங்கும் மருந்துகள், நரம்பியல் மருந்துகள் மற்றும் நுண்ணுயிர் மருந்துகள், அத்துடன் அதன் 11 வகைகளுக்கான துணிக்கட்டுக்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை கருவிகள் காணப்பட்டன. ரூபா 85 மில்லியன் மருத்துவ விநியோகங்களின் 07 வகைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மருத்துவ விநியோக வகைகளின் தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில், தரப் பரீட்சிப்புக்களில் தவறியிருந்த மருத்துவ விநியோகங்களினை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு கட்டளை இடப்பட்டிருந்தபோதிலும் கூட வகைகளின் 90 சதவீதம் தொடக்கம் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட 05 வகைகள் நோயாளிகளுக்கு முழுமையாக விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நோயாளிகளுக்கு இந்த மருந்துகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் இந்த மருந்துகளின் தரப் பரீட்சிப்பினை (Quality Fail) மேற்கொள்ளத் தவறியமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஔ) 2017 பெப்ரவரி 06 மற்றும் 2017 ஏப்ரல் 20 இல் ரூபா 26,444,250 கிரயத்தில் Amoxicillin Oral Suspension BP 125mg அகற்றப்பட்ட அதேசமயம், அதன் அலுமாரி வாழ்காலம் பூர்த்தியடைந்திருந்ததுடன் அதில், ரூபா 26,172,655 கிரயமொன்றில் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருந்து இருப்புக்களின் 99 சதவீதம் நோயாளர்களுக்கு முழுமையாக விநியோகிக்கப்பட்டிருந்தது.

(க) 2017 மே 19 இல் ரூபா 33 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட Vaccine Meropenem 1g இன் கிரயத்தினை அகற்றிய அதேசமயம் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டதுடன், மருந்துகளின் முழுமையான இருப்பு நோயாளிகளுக்கு முழுமையாக விநியோகிக்கப்பட்டிருந்தது.

(கா) தரப்பரீட்சிப்பில் தவறிய மருந்துகளின் இருப்புக் கிரயம் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து நிர்வாகச் செலவின் 25 சதவீதத்தினை அறவிடுவதற்கு மற்றும் நோயாளிகளுக்கு தாழ்ந்த தரத்தினையுடைய, தாழ்ந்த தரமான மருந்துகளின் விநியோகத்தினை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தோல்வியடைந்து காணப்பட்டதுடன் அமைச்சின் முதன்மை நோக்காகக் காணப்பட்ட (Mission) இலங்கை மக்களுக்கு உயர்மட்ட தரத்திலான, உற்பத்தி திறன்வாய்ந்த மற்றும் நிலைபேறான சுகாதார சேவையொன்றினை வழங்குவதற்கு சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

(கி) 2017 ஆம் ஆண்டில் மருத்துவ விநியோகக் கட்டளையில் தவறிய தர பரீட்சிப்பிற்கான நிறுத்திவைத்தல் கட்டளைகளினை விநியோகிப்பதற்கு கணனி முறைமையொன்றைப் பயன்படுத்தியிராது, சுற்றறிக்கைகளில் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. மருத்துவ விநியோகத்தில் தவறியிருந்த தரப் பரீட்சிப்புக்களின் 85 வழக்குகளில், 27 வழக்குகளுக்கான மருத்துவ விநியோக நிறுத்தற் கட்டளைகள் 10 நாட்களிலிருந்து 69 நாட்கள் வரையான காலப்பகுதியின் பின்னர் தொடர்புடைய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. PRONTO கணனி முறைமையினூடாக தரப் பரீட்சிப்பில் தவறிய மருந்துகளினை விநியோகிப்பதினை இடைநிறுத்துவதற்கு தவறிய வகைகளின் தரப் பரீட்சிப்பு பற்றிய முறையீட்டிலிருந்து செயற்படுத்தப்படவுள்ள அடுத்த செயன்முறையின் காரணமாக எதிர்காலத்தில் சுற்றறிக்கைகளினை விநியோகிப்பதில் தாமதங்கள் காணப்படாதென 2016 செப்தெம்பர் 30 இல் கணக்காய்விற்கு

கருத்துரைகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து அண்ணளவாக 2 வருடங்கள் கடந்திருந்ததுடன், தரப் பரீட்சிப்பு தவறிய மருந்துகள் தொடர்பில் கட்டளைகளினை விநியோகிப்பதற்கு PRONTO கணனி முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கீ) மீளாய்வாண்டில் நிறுத்திவைக்கப்பட்டுக் காணப்பட்ட (Withhold) 04 மருத்துவ விநியோக வகைகள் தொடர்பில் மேலதிக புலனாய்வுகளிலுள்ள தாமதம் காரணமாக, 18 மருத்துவ வகைகளின் மாதிரியொன்றினை பரீட்சிக்கும் போது 04 வகைகள் காலாவதியாகியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(கு) முன்னைய ஆண்டுகளில் மருத்துவ விநியோகத்தின் மூலம் உள்ளூர் சந்தைகளிலிருந்து ரூபா 39 மில்லியன் கிரயமுடைய 05 வகையான மருத்துவ மருந்துகள் கொள்வனவுசெய்யப்பட்ட போதிலும், நடைமுறை ஆண்டில் தரப் பரீட்சிப்புக்களில் தவறியிருந்ததுடன், விநியோகஸ்தரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) தரப் பரீட்சிப்பில் தவறியிருந்த மருந்துகளின் இருப்புக் கிரயம் மற்றும் நிர்வாகச் செலவினங்களின் 25 சதவீதத்தினை விநியோகஸ்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2012 திசெம்பர் 13 இல் அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும், 2011 சனவரி 01 இலிருந்து 2017 திசெம்பர் 31 வரையான 07 வருடங்கள் காலப்பகுதியின் போது ரூபா 3,942 மில்லியன் தொகையான மருந்துகளின் தரப் பரீட்சிப்பில் தவறிய மொத்தக் கிரயத்தில் ரூபா 1,022 மில்லியன் மருந்துகள் மாத்திரம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து மருத்துவ விநியோக பிரிவினால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தினால் விநியோகஸ்தரிகளிடமிருந்து ரூபா 514 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இதேபோல், 2010 தொடக்கம் 2017 வரையான 08 வருடங்கள் காலப்பகுதியின் போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்தான நிலுவைத் தொகை ரூபா 748 மில்லியனாகக் காணப்பட்டது.

(கெ) 2016 ஆம் ஆண்டு வரை தரப் பரீட்சிப்பில் தவறிய மருத்துவ விநியோகங்களின் பெறுமதியினை கணிப்பிடும் பொழுது தரப் பரீட்சிப்பில் தவறிய மொத்த இருப்புக்களின் கிரயத்திற்குப் பதிலாக நோயாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட பின்னர் கையிருப்பிலுள்ள இருப்புக்களின் கிரயமான மாத்திரம் கணிப்பிடுவதன் மூலம் கருத்திற்கொண்டு விநியோகஸ்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை காரணமாக, அண்ணளவாக ரூபா 2,000 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டது.

(கே) 2017 யூன் 09 இல் உள்ளபடியான 7,223 மருத்துவ விநியோக வகைகளுக்கு, 03 மாதங்களுக்கு தாக்குபிடிக்கக்கூடிய இருப்பொன்றை (Buffer Stock) மருத்துவ விநியோக பிரிவு கொண்டிருக்கவேண்டிய போதிலும், அந்த தேவைப்பாட்டினை எதிர்கொண்டிராத 5,601 மருத்துவ விநியோக வகைகள் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 2018 யூன் 13 வரையிலும் எவ்வித மருத்துவ விநியோகங்களுக்கான இருப்பு மட்டங்களினை பேணுவதற்கு தேவையான அளவிடைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கை) 98 அத்தியாவசிய (Essential) மருந்துகளில், 28 அத்தியாவசிய (Essential) மருந்துகள் தொடர்பில் நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பொன்றில் 2017 யூன் 12 வரையிலும் மருத்துவ விநியோக பிரிவு மற்றும் வைத்தியசாலைகளில் பூச்சியத்தில் 11 அத்தியாவசதிய வகைகளின் இருப்பு மீதி காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. இதில் சிறுநீரக நோய், சிறுநீர் தொற்று, கூட்டு சீர்குலைவு, சுவாச நோய் மற்றும் காயங்களுக்கான மருந்துகள் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டன.

(கொ) Pronto கணனி முறைமையிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியொன்றின் பிரகாரம், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகள் காலப்பகுதியின் போது அடிக்கடி அத்தியாவசியமாக

(Essential) மற்றும் அத்தியாவசியமற்றதாக (Non Essential) காணப்பட்ட மருத்துவ விநியோக பிரிவின் களஞ்சியங்களில் மருந்துகளின் இருப்புக்கள் பற்றாக்குறை காரணமாக, 09 வைத்தியசாலைகளினால் ரூபா 167 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்தினை விட அதிகமானதொரு விலையில் உள்ளூர் சந்தைகளிலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. உள்ளூர் சந்தைகளிலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்வதன் காரணமாக செலவிடப்படவுள்ள மேலதிக கிரயத்தினை அறவிடுவதற்கு முறைமையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(கோ) மருந்துக் களஞ்சியங்களில் இடப்பற்றாக்குறை காரணமாக பெறுமதியான மருந்து விநியோகங்களின் தொகையொன்று போக்குவரத்து சேவை வழங்குனர்களிடமிருந்து எடுக்கப்பட்டிாததுடன் களஞ்சியத்தின் முன்பாகத்திலுள்ள தாழ்வாரத்தில் வைக்கப்பட்டதுடன் இடைவெளிகளினைக் கொண்ட பின்னர், அவை களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டதுடன் பொருள் பெறுகை குறிப்பு (GRN) விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 28 மில்லியன் கிரயமான 03 இருப்பு வகை உள்ளடங்கலாக 05 வகைகள் 06 நாட்கள் தொடக்கம் 07 மாதங்கள் வரை பண்டகசாலையின் முன்பாகத்திலுள்ள தாழ்வாரத்தில் வைக்கப்பட்டிருந்தமை 2018 மே 10 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பில் உறுதிப்படுத்தப்பட்டது. மேற்குறித்த மருந்துகள் 30 டிகிரி செல்வியஸ்க்கும் அதிகமாக வெப்பத்தில் வைக்கப்பட வேண்டிய போதிலும், அவை தரைத் தளத்தில் 30 டிகிரி செல்சியஸ்க்கும் அதிகமான வெப்பத்துடன் தரைத்தளத்தில் மற்றும் மின்விசிறியொன்று கூட இல்லாது தாழ்வாரத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(கௌ) சரியாக மதிப்பீடுகளை தயாரிக்காமை, சரியான நேரத்தில் விபரக்குறிப்புக்களினை மாற்றாமை, தாமதமான நகரும் தன்மையுடைய வகைகள் தொடர்பில் பயிலாமையின் விளைவொன்றாக, மிகை இருப்பு நிலைமையொன்றினை முகங்கொடுப்பதற்கு நேரிட்டதுடன் ஆகையினால், இருப்புக்களினைப் பெற்ற பின்னர் 02 தொடக்கம் 08 மாதங்களுக்கிடையில் GRN இனை விநியோகிப்பதற்கு தாமதத்தினால் களஞ்சியசாலைக்கு 02 வகைகளினை எடுக்காமைக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டது. களஞ்சியத்திற்கு பொறுப்பேற்காமல் GRN விநியோகிக்காமை மற்றும் இருப்புக்கள் பெற்றதன் பின்னர் மாதங்கள் கடந்திருந்தமை காரணமாக, மருந்து இருப்புக்களின் அரை வாழ்நாள் சுருங்கிக்காணப்பட்டமை, வைத்தியசாலைகளுக்கான மருந்துகளின் விநியோகம் தாமதமாகக் காணப்பட்டமை மற்றும் வைத்தியசாலைகளுக்கு பாரிய இருப்புக்களின் பகுதிகள் பெறப்படுகின்றமை போன்றன மருந்துகளின் காலாவதியொன்றுக்கு அதிக வாய்ப்பாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டன.

(ச) பல்வேறு வருடங்களாக செயற்பாடற்றிருந்த வளிப்பதனாக்கி முறைமையின் திருத்தம் தொடர்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2016 ஒக்தோபர் மாதமளவில் திருத்தங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டியபோதிலும், செயற்பாடற்ற வளிப்பதனாக்கி முறைமையின் திருத்தத்திற்கு அண்ணளவாக 1 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. 2018 யூலை 31 அளவில் மருத்துவ விநியோக பிரிவின் 33 களஞ்சியங்களில் ரூபா 8,000 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுடைய மருந்தாக்கல் இருப்புக்கள் காணப்பட்டதுடன் குறித்துரைக்கப்பட்ட வெப்பத்தில் பேணாமை மருந்துகளின் தகைத்தினைக் குறைப்பதில் நேரடியானதொரு காரணியாகக் காணப்பட்டது. களஞ்சியசாலையின் உற்பகுதியில் 2018 மே 10 இல் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பில், 25 டிகிரி செல்சியஸ்க்கும் அதிகாமான வெப்பநிலையுடன் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த ஆனால், 25 டிகிரி செல்சியஸ்சினை விட குறைந்த வெப்பநிலையுடன் வைக்கப்பட வேண்டிய காட்டப்பட்ட பொதிகளில் ரூபா 24 மில்லியன் பெறுமதியான 08 மருத்துவ வகைகள் உள்ளடங்கலாக 21 வகைகள் அவதானிக்கப்பட்டது. மீதமாகவுள்ள

இருப்புக்களின் தொடர்புடைய பெறுமதியிலிருந்து வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பகுதியினைத் தவிர 29.5 தொடக்கம் 31.9 வரையான டிகிரி செல்சியஜ்க்கு இடைப்பட்ட வெப்பநிலையில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அந்த குறிப்பிடப்பட்ட வெப்பநிலையில் பொருத்தப்படாத நேர காலம் 08 நாட்கள் தொடக்கம் 425 நாட்கள் வரை (01 வருடம் 02 மாதங்கள்) இடைப்பட்டதாகக் காணப்பட்டது. இந்த மருந்துகளுக்குள், புற்றுநோய், சிறுநீரக நோய், உயர் குருதி அமுக்கம் மற்றும் வலிப்பு போன்ற சுவாச நோய்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் வலி கொல்லிகள் போன்ற நோய்களுக்குத் தேவையான மருந்துகளும் காணப்பட்டன.

(சா) 25 டிகிரி செல்சியஸ்க்கு கீழுள்ள வெப்பநிலையில் போக்குவரத்துச் செய்யப்பட வேண்டிய சில மருந்துகள் சாதாரண வெப்பத்தில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ விநியோக பிரிவிற்கு போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் குளிர் களஞ்சியத்தில் போதுமான இடைவெளி காணப்படாததிலிருந்து மற்றும் மருத்துவ விநியோக பிரிவின் மருந்துகளின் பற்றாக்குறையினை தடுப்பதற்கு தேவையொன்று காணப்பட்டதிலிருந்து அதே வகையில் இருப்பு பெறப்பட்டதுடன் சாதாரண களஞ்சியத்தில், களஞ்சியப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில், மருந்துகள் சேதமடைந்து காணப்பட்டால், மருந்துவ விநியோக பிரிவினால் தொடர்புடைய இருப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் காணப்பட்டால் கூட அந்த இருப்பினை மீளளிப்புச் செய்ய முடியுமாகக் காணப்படும். அத்துடன் குறித்துரைக்கப்பட்ட வெப்பத்தில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டுக் காணப்படாமையினால், மருந்துகளின் தரத்தின் மீதான தாக்கங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

(சி) மருத்துவ களஞ்சியங்களில் அதிகமானவை, நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் மருந்துகளினை வழங்குகின்ற மருத்துவ விநியோக பிரிவு, பிரதேச மருத்துவ விநியோக நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் அதிகமானவை குறித்துரைக்கப்பட்ட வெப்பநிலைகளின்றி செயற்படுத்தப்படுகின்றன.

(சீ) ரூபா 8 மில்லியன் கிரயத்தில் காணப்பட்ட மருத்துவ விநியோக வகைகளின் 06 வகைகள் மீளாய்வாண்டின் போது மருத்துவ விநியோக பிரிவில் காலாவதியடைந்து காணப்பட்டது. அதில் ரூபா 6 மில்லியன் கிரயமுடைய 02 வகையான மருந்துக்கள் விநியோகத்தின் பூர்த்திக்கு முன்னர் குறுகிய கால அலுமாரி வாழ்நாளுடன் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக மருத்துவ விநியோக பிரிவில் காலாவதியடைந்து காணப்பட்டது. விநியோகஸ்தரிடமிருந்து ஒரு வகைக்கு ஏற்பட்ட சேதத்தினை அறவிடுவதற்கு சான்றுப்பத்திரமொன்று பெறப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலைகளிலுள்ள காலாவதியான மருந்துக்களின் பெறுமதிகளில் உள்ளடக்கப்பட்ட இந்த மருந்துக்களில் கூட ரூபா 8 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கு மேலாக கடந்திருந்த போதிலும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(சு) 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் வரையான 03 ஆண்டுகளின் போது, அமைச்சின் கீழுள்ள மருத்துவ விநியோக பிரிவு மற்றும் வைத்தியசாலை மற்றும் பிரதேச மருத்துவ விநியோக நிலையங்களில் தொடர்ந்தும் காணப்படும் காலாவதியான மருத்துவ விநியோகங்களின் மொத்தக் கிரயம் ரூபா 1,122 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. மருத்துவ விநியோககங்களின் தரப்பரீட்சிப்பில் தாமதங்கள், காலாவதியாகக் கூடியனவாகக் காணப்படும் விநியோகங்களின் கொள்வனவு, மருந்துகளின் குறைந்த பாவனை மற்றும் வைத்தியர்களின் சேவை நிலையங்களில் இடமாற்றம் போன்ற காரணங்கள் காரணமாக மருத்துவ விநியோகங்கள் காலாவதியாகியிருந்தது.

(சூ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 713 பதவிகளில், மருத்துவ விநியோக பிரிவின் 256 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்ததுடன் 06 உதவி

பணிப்பாளர் (மருத்துவ விநியோகம்) பதவிகள், 12 Fork Lift இயக்குபவர்கள், 23 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், 62 உதவி மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள், 26 Packer பதவிகள் மற்றும் 56 களஞ்சிய காப்பாளர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை மருத்துவ விநியோக செயற்பாடுகளினை வினைத்திறனாக மற்றும் விளைதிறனாக நடாத்துவதற்கு தடையொன்றாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.21 Thyroxin மருத்தின் காலாவதி

Thyroxin குறைபாட்டிலிருந்து பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு 2016 ஆம் ஆண்டு தொடர்பில் அரச வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு மருத்துவ விநியோக பிரிவினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 18,154,423 கிரயத்தில் கொள்வனவுசெய்யப்பட்ட Thyroxin 50mcg மருந்துகளில், 4,332,950 எண்ணிக்கையான ரூபா 2,810,709 கிரயத்தினையுடைய மாத்திரைகள் அல்லது மொத்த பகுதியில் 15 சதவீதம் காலாவதியாகியிருந்தது. காலாவதியான இருப்பிலிருந்து, ரூபா 896,940 கிரயமுடைய 1,383,100 மாத்திரைகள் மருத்துவ விநியோக பிரிவுனுள்ளே களஞ்சியத்திற்குள் காலாவதியாகியிருந்தது. ரூபா 1,209,582 கிரயமான 1,865,200 மாத்திரைகளின் எண்ணிக்கையொன்று பிராந்திய மருத்துவ விநியோக பிரிவிற்கு (RMSD) விநியோகிக்கப்பட்டிருந்த அதேவேளை, அவை காலாவதியாகக்கூடியனவாகக் காணப்பட்டதுடன் பிராந்திய மருத்துவ விநியோக பிரிவினுள் காலாவதியாகியிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 704,187 கிரயத்தினையுடைய 1,084,650 மாத்திரிகைளின் எண்ணிக்கையொன்று 15 மாகாண சபை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் அந்த வைத்தியசாலைகளில் காலாவதியாகியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விலைமனு ஆவணங்களின் 2.2 ஆம் நிபந்தனைகளின் பிரகாரம், தீவிற்கு மருந்தொன்று கிடைக்கப்பெறும் போது ஆகக்குறைந்தது 24 மாதங்களேனும் காணப்பட வேண்டியபோதிலும், அண்ணளவாக 14 மாதங்கள் அலுமாரி வாழ்நாளையுடைய Thyroxin 50mcg மருந்துகள் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவ விநியோக பிரிவின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் குறுகிய கால அலுமாரி வாழ்நாளையுடைய இந்த மருந்துகளின் காலாவதி மூலம் ஏற்படுத்தப்படக்கூடிய நட்டத்தினை இழிவாக்குவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து எவ்வித சான்றுப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் அனுப்பப்பட்ட மருந்துக்களின் இந்த இருப்பு அவசரமான திருத்த வேலையொன்று மற்றும் போதுமான இடவசதியின் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து விநியோகஸ்தரின் வளாகத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது. இந்த மருந்தின் விநியோகத்திற்கு போதுமான மற்றும் முறையானதொரு நிகழ்ச்சித்திட்டத்தினை மருத்துவ விநியோக பிரிவு கொண்டிருக்காமையின் விளைவொன்றாக, அண்ணளவாக 05 மாதங்கள் காலப்பகுதிக்கு போக்குவரத்து விநியோகத்தரின் வளாகத்தில் அவற்றை பயனற்றதாக நிறுத்திவைக்க மற்றம் களஞ்சிய வாடகை மற்றும் தாமதக் கட்டணங்களாக ரூபா 617,000 தொகையொன்று செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேற்குறிப்பிடப்பட்ட திருப்பியனுப்பப்பட்ட ரூபா 18,154,423 கிரயமுடைய 27,995,900 ஆன மாத்திரை இருப்புக்களின் அலுமாரி வாழ்நாள் மீண்டும் மருத்துவ விநியோக பிரிவினால் பொறுப்பேற்கும் பொழுது அண்ணளவாக 08 மாதங்கள் மற்றும் 11 நாட்களாகக் காணப்பட்டது. அதற்கமைய அவ்வாறான 08 மாதங்கள் குறுகிய காலப்பகுதியொன்றுக்குள் 28 மில்லியன் மாத்திரைகளின் விநியோகத்தினைப் பூர்த்தி செய்வது சாத்தியமற்றதாகக் காணப்பட்டிருந்தது.

(உ) அந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவகங்களுக்கு விநியோகிப்பதன் மூலம் மருத்துவ விநியோக பிரிவின் களஞ்சியங்களிலுள்ள பாரியளவிலான எண்ணிக்கையான இருப்பின் காலாவதியினை தவிர்ப்பதன் மூலம் பொறுப்பிலிருந்து விடுபட்டதாக மருத்துவ விநியோக பிரிவு காணப்பட்டபோதிலும், அமைச்சில் காணப்பட்ட PRONTO முறைமையினால் மேவுகை செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மற்றும் பிராந்திய மருத்துவ விநியோக பிரிவின் (RMSD) வளாகத்தினுள் இருந்த இருப்புக்கள் காலாவதியாகக் கூடியாக தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளை மீதமாகவுள்ள காலாவதியாகவுள்ள காலப்பகுதி 02 தொடக்கம் 03 மாதங்களுக்கிடைப்பட்டதாகக் காணப்பட்டதுடன், இந்த நட்டத்திற்கு பொறுப்பான மருத்துவ விநியோக பிரிவிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது, இந்த வகைகள் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டு அகற்றப்பட்டிருந்தது.

(ஊ) குறுகிய கால அலுமாரி வாழ்நாளுடனான மேற்குறித்த, மருந்து காலாவதியாகுவதற்கு ஒரு நாள் மாத்திரம் கூட காணப்பட்டபோதிலும், பிராந்திய மருத்துவ விநியோக பிரிவுகளின் (RMSD) PRONTO கணனி முறைமையினால் மேவுகை செய்யப்பட்டிராது மாகாண சபை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) 2017 யூன் 30 இல் காலாவதியாகக்கூடிய இந்த இருப்புக்களின் விநியோகத்தினைப் பூர்த்திசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பதிலீட்டு நடவடிக்கைகள் காரணமாக ஏனைய Thyroxine 50mcg தொகுதிகள் மற்றும் Thyroxine 100mcg தொகுதிகள் தொடர்பில் 03 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவகங்களில் ரூபா 766,087 பெறுமதியுடைய 603,300 மாத்திரைகள் மாத்திரம் காலாவதியாகியிருந்தது.

(ஏ) ஹோமாகம தள வைத்தியசாலைக்கான இந்த மருந்துகளின் வருடாந்த மதிப்பீடு ரூபா 600,000 ஆகக் காணப்பட்ட போதிலும், மருத்துவ விநியோகப் பிரிவினால் வழங்கப்பட்ட 1,100,000 மாத்திரைகள் காரணமாக, அது பிழையாக 6,000,000 என மதிப்பிடப்பட்டதுடன் அந்த வைத்தியசாலையில் ரூபா 368,348 கிரயமுடைய 568,000 மாத்திரைகள் காலாவதியடைந்து காணப்பட்டது.

(ஐ) காலாவதியாகியிருந்த குறுகிய கால அலுமாரி வாழ்காலத்தினையுடைய இருப்பெடுப்பொன்றை எடுத்தமை காரணமாக, குறுகிய கால அலுமாரி வாழ்காலத்தினையுடைய இருப்புக்களினை விநியோகிக்கும் அதேவேளை காலாவதியாகியிருந்த ஏனைய வகைகளிலுள்ள மருந்துகள் மற்றும் அவற்றிற்கு களஞ்சிய மற்றும் தாமதக் கட்டணங்கள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 4,164,168 ஆகக் காணப்பட்டது.

(ஒ) களஞ்சியங்களில் இந்த வகைகள் காலாவதியாகக் கூடியதாகக் காணப்பட்டதுடன், ஏனைய மாகாண வைத்தியசாலைகளிலுள்ள மருத்துவமனை விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் கணக்காய்வு பரீட்சிப்பினால் மேவுகை செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் கிரயம் கணிப்பிடப்படுமாக இருந்தால் நட்டம் மிக அதிகமாகக் காணப்படக்கூடும்.

**2.22 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.22.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்களுக்கான செலவினம்**

மேற்குறித்த 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான

பதவியணியினர், வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதியங்களுக்கான செலவின வகைக்கு ரூபா 64,271 மில்லியன் தொகையொன்று அமைச்சிற்கு ஏற்பட்டது. அதற்கமைய, தலா மூலதன செலவினம் ரூபா 889,306 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைப் பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 15,586 | 13,615 | 1,971 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 35,237 | 28,561 | 6,676 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 5,708 | 3,840 | 1,868 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 30,925 | 22,555 | 8,370 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 73 | 3,700 | - | 3,627 |
| | **மொத்தம்** | **87,529** | **72,271** | **18,885** | **3,627** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 06 சிரேஷ்ட மட்ட பதவிகள் தொடர்பில் 481 உத்தியோகத்தர்களும், 24 மூன்றாம் மட்ட பதவிகள் தொடர்பில் 194 உத்தியோகத்தர்களும், 14 இரண்டாம் மட்ட பதவிகள் தொடர்பில் 86 உத்தியோகத்தர்களும், மற்றும் 25 ஆரம்ப மட்டப் பதவிகள் தொடர்பில் 2661 உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 3,422 உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையொன்று மிகையாக ஊழியப்படுத்தப்பட்டதுடன் சம்பளங்களும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஒப்பிடுகையில் 34 சிரேஷ்ட மட்ட பதவிகள் தொடர்பில் 2,452 வெற்றிடங்களும், 95 மூன்றாம் மட்ட பதவிகள் தொடர்பில் 6,870 வெற்றிடங்களும், 50 இரண்டாம் மட்ட பதவிகள் தொடர்பில் 1,954 வெற்றிடங்களும் மற்றும் 60 ஆரம்ப மட்ட பதவிகள் தொடர்பில் 11,031 வெற்றிடங்களும் தொடர்ந்தும் காணப்பட்டன.

(இ) அங்கீகாரமின்றி ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையினை மிகைத்து ஆரம்ப மட்டத்துடன் தொடர்புடைய 3,627 எண்ணிக்கையான ஊழியர்கள் அமைய / தற்காலிக / ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதுடன் சம்பளமும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஷ்ட மட்டத்திலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 12,889 ஆகக் காணப்பட்டமையினால், உள்ளபடியான எண்ணிக்கை 11,129 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,760 ஆகவும் காணப்பட்டது. இருந்த போதிலும், 09 மாகாணங்களிலுள்ள 71 வைத்தியசாலைகளிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளில் 2,078 வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்பட்டதுடன், மத்திய, வடமேல், தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் 28 நகர்ப்புற வைத்தியசாலைகளில் 181

மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளும் பட்டப்பின் மருத்துவ விஞ்ஞான பட்ட பயிற்சிக்கான 136 மருத்துவ உத்தியோகத்தர்களும் காணப்பட்டமையினால் மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளில் 317 மொத்த எண்ணிக்கை மிகையாகப் பேணப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 44 பல்வேறுபட்ட விடயங்களின் கீழ் சிரேஷ்ட மட்டத்துடன் தொடர்புடைய விசேட மருத்துவ உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 1,464 ஆகக் காணப்பட்டமையினால், உள்ளபடியான எண்ணிக்கை 1,446 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 18 ஆகவும் காணப்பட்டது. 37 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 139 வெற்றிடங்களினை உருவாக்கும் பொருட்டு மற்றும் அந்த விசேட மருத்துவ உத்தியோகத்தர்களினை 32 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிலுள்ள 121 பதவிகளிலுள்ள மிகையினை அனுப்பும் பொருட்டு ஆளணியினர் ஸ்தாபிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) மேல் மாகாணத்தில் 04 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 24 மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளின் வெற்றிடங்கள் 02 வருடங்களாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராது வெற்றிடமான முறையில் முழுமையாக பேணப்பட்டிருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டிற்கான இடமாற்றுக் கட்டளைகள் 2017 யூன் 29 இல் விநியோகிக்கப்பட்ட போதிலும், 744 மருத்துவ உத்தியோகத்தர்கள் 2018 மார்ச்சின் இறுதியளவிலும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட வேலை நிலையங்களில் அறிக்கையிட்டிருக்கவில்லை.

(ஏ) நாட்டின் தேசிய தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு நிபுணத்துவத்தின் பிரகாரம் நிபுணத்துவம் வாய்ந்து காணப்படவேண்டிய வைத்தியர்களின் எண்ணிக்கையினை கண்டறிவதற்கான நடவடிக்கைகளினை அமைச்சு எடுத்திருக்காததுடன் மருத்தவ பட்டப்பின் பட்ட பயிற்சிக்கான மருத்துவ உத்தியோகத்தர்களினை குறிப்பிடும் பொழுதுகூட விசேட மருத்துவ உத்தியோகத்தர்களின் ஒவ்வொரு பதவிகளிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு மருத்துவ பட்டப்பின் பயிற்சியின் ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிரதம கணக்காளர் மற்றும் கணக்காளர் பதவிகள், மேலதிக செயலாளர் பதவிகள், உதவி செயலாளர் பதவிகள், உதவி பணிப்பாளர் பதவிகள், பிரதம சட்ட உத்தியோகத்தர்கள், உயிரியல் அறிஞர், விஞ்ஞானி மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் போன்ற நிர்வாக மற்றும் நிதிசார் பரப்புகளிலுள்ள 51 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின்போது தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டுகின்றது. அவற்றில் 25 பதவிகள் கடந்த 02 ஆண்டுகளின் போது கூட தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. அதற்கமைய, இந்தப் பதவிகளின் தேவை கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

(ix) தாபனக்கோவையின் அத்தியாயம் II இன் 13.1(ஆ) பந்திக்கு முரணாக சுகாதார அமைச்சு செயலாளரினால் நியமிக்கும் அதிகாரசபையின் அங்கீகாரமின்றி பிரதம சட்ட உத்தியோகத்தர் பதில் பதவிக்கு தரம் II இனையுடைய பொறுப்பான சட்ட உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 05 வருடங்கள் கடந்திருந்தபோதிலும், அந்த பதவியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) குருநாகல் பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் கடமைகள் 2015 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து பிரதி பணிப்பாளரினால் மேவுகை செய்யப்பட்டு வருகின்றது. பணிப்பாளரின் பதவியில் வெற்றிடம் காணப்படுகின்றமை காரணமாக, வைத்தியசாலையில் முறையான நிர்வாக தொழிற்பாடுகளினை பேணுதல் மற்றும் வைத்தியசாலையின் பிரதான திட்டத்தினை அமுல்படுத்தல் என்பன சிக்கல் தன்மையுடைய நிலைமையொன்றில் காணப்பட்டது.

(ஔ) 2017 சனவரி 18 இலிருந்து குருநாகலிலுள்ள தாதியர் பாடசாலையின் அதிபர் பதவிக்கு நிரந்தரமான உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக, விசேட தரத்திலுள்ள தாதியர் பயிற்சி உத்தியோகத்தரொருவர் அந்தப் பதவியின் கடமைகளினை மேவுகை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

(க) வைத்திய உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற அமுல்படுத்தல் தொடர்பில் மாத்தறை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 சனவரியிலிருந்து அமுல்படுத்தப்பட வேண்டிய வருடாந்த இடமாற்றத்தின் இறுதி பட்டியல் 2017 யூன் 30 இல் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த இறுதி ஆவணத்தில் காணப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட பரீட்சிப்பில் இடமாற்றக் கட்டளைகளின் அடிப்படையில் மற்றுமொரு இடத்திற்கு நகர்த்தப்பட வேண்டிய 25 உத்தியோகத்தர்கள் கணக்காய்வுத் திகதியான 2018 மே 17 வரை அவர்களின் இடமாற்றக் கட்டளையினை பின்பற்றியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றக் கட்டளையின் அடிப்படையில் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்த 20 மருத்துவ உத்தியோகத்தர்கள் கணக்காய்வுத் திகதி வரை மாத்தறை பொது வைத்தியசாலைக்கு அறிக்கையிட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2016 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றத்தின் பிரகாரம், மாத்தறை பொது வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய மூன்று வைத்தியர்கள் கணக்காய்வுத் திகதி வரை விடுவிக்கப்பட்டிருக்காததுடன் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு இணைக்கப்பட வேண்டிய 14 வைத்தியர்கள் கணக்காய்வு திகதி வரை மாத்தறை பொது வைத்தியசாலைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்த இடமாற்றக் கட்டளை 2015 இன் கீழ் மாத்தறை பொது வைத்தியசாலையிலிருந்து ஏனைய வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்ட மூன்று வைத்தியர்கள் கணக்காய்வுத் திகதி வரை மாத்தறை பொது வைத்தியசாலையில் ஆக்கிரமித்துக் காணப்படுகின்றனர்.

(v) 2012 ஒக்தோபர் 25 இல் மாத்தறை வைத்தியசாலையில் வேலைக்கு அறிக்கையிட்ட வைத்தியரொருவரின் பெயர் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற கட்டளை பட்டியலில் தவறாக உள்ளடக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரை அந்த உத்தியோகத்தருக்கு எதிராக இடமாற்றக் கட்டளையொன்று இதுவரை பெறப்படவில்லை.

(கா) குருநாகல் பொது வைத்தியசாலையின் தச்சுவேலை பிரிவுக்கான 05 தச்சுத் தொழிலாளர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் வைத்தியசாலையின் ஊழிய உதவியாளர்கள் இந்த நோக்கத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 06 சமையல்காரர்கள், 08 ECG பதிவு உத்தியோகத்தர்கள், 06 மின்சார தொழில்நுட்பவியலாளர்கள், 11 கதிரியக்கவியலாளர்கள் மற்றும் மனநல மருத்துவ சிகிச்சைகளுக்கான மனநல சிகிச்சையளிப்பவர்கள் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை அந்தப் பிரிவுகளின் முறையான அடைவுகளுக்கு தாக்கமளித்திருந்தது.

(கி) ஆளணியினரின் 06 பதவிகளுக்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திராது, மருத்துவ தாதியர் ஆலோசகர் 01 பதவி, நூலக உதவியாளர் 01 பதவி மற்றும் சுகாதார கவனிப்பு உதவியாளர்களில் (அமைய) 04 பதவிகள் குருநாகல் தாதியர் பாடசாலையில் எவ்வித அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளாது ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(கீ) குருநாகல் தாதியர் பாடசாலையில் 01 சமையலாளர், 01 சுகாதார துறை சாரதி, 01 காவலாளர் பதவி, 01 நூலகர், தாதியர் போதனையாளர் தரம் - I 09 பதவிகள் மற்றும் அதிபர் பதவிகள் உள்ளடங்கலாக பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன.